# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

# வருடாந்த செயற்றிறன் அறிக்கை

# Annual Performance Report

# 2022

**ජාතික ක්‍රමසම්පාදන දෙපාර්තමේන්තුව**

**මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය**

**தேசிய திட்டமிடல் திணைக்களம்**

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**

## Department of National Planning

## Ministry of Finance, Economic Stabilization and National Policies

**2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்றிறன் அறிக்கை**
**நிறுவனத்தின் பெயர் : தேசிய திட்டமிடல் திணைக்களம்**
**செலவினத் தலைப்பு இலக்கம் 237**


**அத்தியாயம் 01 - நிறுவனச் சுயவிவரம் / நிர்வாகச் சுருக்கம்** ........ 63

1.1 அறிமுகம் ........ 63

1.2. நிறுவனத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள் ........ 63

1.3. பிரதானமான செயற்பாடுகள் ........ 63

1.4. நிறுவன விளக்கப்படம் ........ 65

1.5. திணைக்களத்தின் பிரதானமான பிரிவுகள் ........ 66

1.6. திணைக்களத்தின் கீழ் உள்ள நிதியங்கள் ........ 66

1.7. வெளிநாட்டு உதவிகள் பெறப்படும் கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள் (இருப்பின்) ........ 66

**அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்காலப் பார்வை** ........ 67

2.1 சுற்றுலா, கைத்தொழில் மற்றும் வர்த்தகம் ........ 67

2.2. விவசாயம், நீர்ப்பாசனம், காணி, கால்நடைகள், மீன்பிடி, பெருந்தோட்டம், சுற்றாடல் மற்றும் இடர் முகாமைத்துவம் ........ 70

2.3. நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து, போக்குவரத்து, மின்வலு மற்றும் எரிசக்தி, நீர் வள மற்றும் கழிவகற்றல் வசதிகள் ........ 79

2.4. நகர அபிவிருத்தி மற்றும் வீடுகள் ........ 81

2.5. சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவம், கல்வி, உயர் கல்வி மற்றும் திறன் அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மற்றும் சமூக பாதுகாப்பு ........ 82

2.6. பொது நிர்வாகம், நல்லாட்சி, கலாச்சாரமும் மத விவகாரங்களும், பேரண்டப் பொருளாதார அபிவிருத்தி ........ 87

2.7. தொழிலாளர் நடவடிக்கைகள் ........ 89

2.8. இளைஞர், விளையாட்டு நடவடிக்கைகள், பிராந்திய அபிவிருத்தி ........ 90

2.9. பிராந்திய அபிவிருத்திப் பிரிவு ........ 91

2.10. உலக உணவு வேலைத்திட்டம் (WFP) ........................................................................92

2.11 எதிர்பாராத மற்றும் அவசரநிலைப் பதில் கூறுகள் (CERCs)...........................102

**அத்தியாயம் 03 - 2022 மார்கழி 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்குரிய ஒட்டுமொத்த நிதிச் செயற்திறன்**.........................................................................................................104

3.1. நிதிச் செயலாற்றுகைக் கூற்று ......................................................................104

3.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று ....................................................................105

3.3 காசுப்பாய்ச்சல் தொடர்பான கூற்று ...................................................................106

3.4. நிதிக் கூற்றிற்கான குறிப்பு ........................................................................106

3.5 வருமானம் சேகரிப்பின் செயற்றிறன் - பொருத்தமற்றது ..................................107

3.6. ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயற்றிறன்.........................................................107

3.7. நி.பி 208 இற்கு அமைவாக, ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் ஒரு முகவராக இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் ................................107

3.8 நிதி அல்லாத சொத்துக்களின் செயற்றிறன் கூற்று.............................................108

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.............................................................108

**அத்தியாயம் 04 – செயற்றிறன் காட்டிகள்**.........................................................108

4.1 நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் (செயற் திட்டத்தின் அடிப்படையில்) ........................................................................................................................108

**அத்தியாயம் 05 - நிலைத்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயற்திறன்** ........................................................................................................................109

5.1 இனங்காணப்பட்டுள்ள குறித்த நிலையான அபிவிருத்தி இலக்குகள் ................109

5.2 நிலைத்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்...........109

**அத்தியாயம் 06 - மனித வள விவரக்குறிப்பு**.........................................................110

6.1 ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம் ...............................................................110

6.2 நிறுவனத்தின் செயற்திறனில் மனித வளங்களில் குறைவு அல்லது அதிகரிப்பு எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பது தொடர்பான விபரம். ...............110

6.3 மனித வள அபிவிருத்தி......................................................................................110

**அத்தியாயம் 07 - உடன்பாட்டறிக்கை**.................................................................113

# அத்தியாயம் 01 - நிறுவனச் சுயவிவரம் / நிர்வாகச் சுருக்கம்

## 1.1 அறிமுகம்

தேசிய திட்டமிடல் திணைக்களம் 1956 ஆம் ஆண்டில் பிரதம அமைச்சரின் தலைமையின் கீழ் தேசிய திட்டமிடல் சபையாக நிறுவப்பட்டு முதன்முறையாக திட்டமிடல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமையும் விதத்தில், முழுமையான நாட்டையும் உள்ளடக்கியவாறு விரிவான ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டமொன்றை முன்வைத்தது. **1961** ஆம் ஆண்டில் இச்சபை மேலும் பலப்படுத்தப்பட்டு பிரதம அமைச்சரின் அலுவலகத்தில் திட்டமிடல் திணைக்களமாக நிறுவப்பட்டது. இதன் கீழ், இத் திணைக்களம் ஒரு குறுகிய கால அபிவிருத்தி வேலைத் திட்டத்தைத் தயாரித்து, திட்டமிடல் செயற்பாட்டிற்காக உருட்டல் திட்ட (rolling plan) எண்ணக்கருவை முதல் முறையாக அறிமுகப்படுத்தியது. அதன் பின்னர் , 1965 ஆம் ஆண்டில் இத் திணைக்களம் திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் கீழ் நியமிக்கப்பட்டு மூலதன வரவு செலவுத் திட்டம் தயாரித்தல், அபிவிருத்தி நடவடிக்கைகளை செயற்படுத்தல் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை போன்றன ஒப்படைக்கப்பட்டன. **1974** ஆம் ஆண்டில், தேசிய திட்டமிடல் திணைக்களம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது, அதனைத் தொடர்ந்து அடுத்தடுத்த அரசாங்கங்கள் இதனை அவ்வப்போது நிதி, திட்டமிடல் மற்றும் கொள்கை மேம்பாட்டுக்கு பொறுப்பான அமைச்சுக்களுடன் இணைத்திருந்தன. தற்போது, இலங்கையின் பிரதானமான அபிவிருத்தி ஆலோசகராகவும், வசதிகள் வழங்குநராகவும், நிதிப் பிராமண எண் **3 (2)** மற்றும் எண் **35** ஆகியவற்றால் ஒதுக்கப்பட்ட அதிகாரத்திற்கு ஏற்ப திணைக்களம் அதன் செயற் பாடுகளைச் செயற்படுத்துகிறது.

## 1.2. நிறுவனத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று, நோக்கங்கள்

**தூர நோக்கு**

தேசத்தின் மிகை திறனுடைய கொள்கை ஆலோசகராகவும் அபிவிருத்தியில் வசதியளிப்பவராகவும் இருத்தல்.

**பணிக்கூற்று**

நாட்டில் காணப்படும் வரையறுக்கப்பட்ட மூலவளங்களினூடாக உச்ச பயனைப் பெறக்கூடிய வகையில் சிறப்பான திட்டமிடல் அணுகுமுறைகளைப் பின்பற்றி கொள்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குவதில் உயர்ந்தபட்ச தொழில்வாண்மையைப் பேணும் வகையில் சர்வதேச தரத்திலான திட்டமிடல் திறன்களைத் தொடர்ச்சியாக மேம்படுத்துதல்.

**நோக்கம்**

1. அரச முதலீடுகளை வினைத்திறனான முறையில் பயன்படுத்தல்.
2. குறித்த அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களில் பொது முதலீட்டின் மூலம் சமூக-பொருளாதார நன்மைகள் உயர்ந்த பட்சத்தில் காணப்படும் விதத்தில் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் வேலைத் திட்டங்களை தேசிய கொள்கை கட்டமைப்பிற்கு ஏற்ப வகுக்கத் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்குதல்.

## 1.3. பிரதானமான செயற்பாடுகள்

- தேசிய மற்றும் துறைசார் கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களை வகுக்க பங்களிப்பை வழங்குதல்.
- கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல்.
- அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புகளை வழங்குதல்.

- துறைசார் அணுகுமுறைகளை உருவாக்குவதற்கு தலைமை வகித்தல் .
- தேவைக்கேற்ற விதத்தில் திட்டமிடல் முறைகளைப் புதுப்பித்தல்.
- தேவைக்கேற்ப தேசிய மற்றும் துணை தேசிய அளவிலான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதலை வழங்குதல்.
- தேசிய திட்டமிடல் செயன்முறையில் நிலையான அபிவிருத்தி இலக்குகளைப் பிரதானப்படுத்துதல்.
- அபிவிருத்தி பங்காளிகளுடன் அபிவிருத்தி தேவைகளை இனங்காண வசதிகளை ஏற்படுத்தல்.
- விசேட பணிகளில் பங்கேற்றல்.
- வெளியீட்டு ஆவணங்களை தயாரித்தல்.
- திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள தேசிய மற்றும் பிராந்திய அதிகாரிகளின் திறன் மேம்பாடு.
- அரசாங்க கொள்கை கட்டமைப்பிற்கு ஏற்ப பரிந்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் கண்காணித்தல் (செயற்படுத்தும் வரை).
- பணியாளர்களின் திறன் மேம்பாடு.
- பொது நிர்வாகம் மற்றும் நிதி.

## 1.4. நிறுவன விளக்கப்படம்



## 1.5. திணைக்களத்தின் பிரதானமான பிரிவுகள்

திணைக்களத்தின் செயற்பாடுகளை திறனாக நிறைவேற்றுவதற்காக, திணைக்களம் 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இவ் 8 பிரிவுகளும் பொருளாதார வளர்ச்சித் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மேலும் துணைப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவுகளும் அவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் துறை தொடர்பான நிரல் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் தயாரிக்கப்படுகின்ற கருத்திட்ட முன்மொழிவுகள், பொது முதலீட்டுக் கொள்கை தயாரிப்பு, கொள்கை தயாரிப்பிற்காக நிரல் அமைச்சுக்களிற்கு பங்களிப்பை வழங்குதல் மற்றும் பிற தொடர்புடைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான பொறுப்பேற்றல்.

இதற்கு மேலதிகமாக, பேரண்டப் பொருளாதார திட்டமிடல், தகவல் விநியோகித்தல் மற்றும் திணைக்களத்தின் நிர்வாகம் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளவதற்காக மூன்று தனித்தனி ஆதரவு அலகுகள் உள்ளன.

1) தகவல் அபிவிருத்தி மையம்
2) நிர்வாகப் பிரிவு
3) நிதிப் பிரிவு

**திணைக்களத்தின் பிரிவுகள்**

- சுற்றுலா, கைத்தொழில் மற்றும் வர்த்தகம்
- விவசாயம், நீர்ப்பாசனம், காணி, கால்நடைகள், மீன்பிடி, பெருந்தோட்டம், சுற்றாடல் மற்றும் இடர் முகாமைத்துவம்
- நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து, போக்குவரத்து, மின்வலு மற்றும் எரிசக்தி, நீர் மற்றும் கழிவகற்றல் வசதிகள்
- நகர அபிவிருத்தி மற்றும் வீடுகள்
- சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவம், கல்வி, உயர் கல்வி மற்றும் திறன் அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மற்றும் சமூக பாதுகாப்பு
- பொது நிர்வாகம், நல்லாட்சி, கலாச்சாரமும் மத விவகாரங்களும், பேரண்டப் பொருளாதார அபிவிருத்தி
- தொழிலாளர் நடவடிக்கைகள்
- இளைஞர், விளையாட்டு நடவடிக்கைகள், பிராந்திய அபிவிருத்தி
- பிராந்திய அபிவிருத்திப் பிரிவு
- உலக உணவுத்திட்டம்

## 1.6. திணைக்களத்தின் கீழ் உள்ள நிதியங்கள்

## 1.7. வெளிநாட்டு உதவிகள் பெறப்படும் கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள் (இருப்பின்)

1. கருத்திட்டத்தின் பெயர்: உலக வங்கி நன்கொடைகளின் கீழ் இயங்கும் முதலீட்டு கருத்திட்டங்களின் அவசரகால பதிலளிப்பு
2. நன்கொடை வழங்கும் நிறுவனம் : உலக வங்கி
3. கருத்திட்ட மதிப்பீடு : ரூ.10,491 மில்லியன்
4. கருத்திட்ட காலம் : 2020.09.30 – 2023.03.30

1. கருத்திட்டத்தின் பெயர்: Promoting Autonomy, Literacy and Attentiveness through

Market Alliances (PALAM/A)

2. நன்கொடை வழங்கும் நிறுவனம்: ஐக்கிய அமெரிக்காவின் விவசாயத் திணைக்களம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி
3. கருத்திட்ட மதிப்பீடு: ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 26 மில்லியன் மற்றும் ரூபா 140 மில்லியன்
4. கருத்திட்ட காலம்: 2021 -2024

1. கருத்திட்டத்தின் பெயர்: உலக உணவு வேலைத்திட்டம்
2. நன்கொடை வழங்கும் நிறுவனம்: உலக உணவு வேலைத்திட்டம் (WFP)
3. கருத்திட்ட மதிப்பீடு - ரூபா 46.5 மில்லியன்
4. கருத்திட்ட காலம்: 2018-2022

# அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்காலப் பார்வை

## 2.1 சுற்றுலா, கைத்தொழில் மற்றும் வர்த்தகம்

**சுற்றுலாத்துறை**

சுற்றுலாத்துறையானது இலங்கையின் பொருளாதாரத்தின் மிக முக்கியமான துறைகளில் ஒன்றாக அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் மற்றும் இலகுவாக அபிவிருத்தி செய்யக்கூடிய துறையாக இனங்காணப்பட்டுள்ளது. பரந்த பொது மக்கள் பங்கேற்புடன் சுற்றுலாவை சுற்றாடல், உள்ளூர் கலாசார நட்புத் தொழில் முயற்சியாக விருத்தி செய்வது அரசின் கொள்கையாகும். எவ்வாறாயினும், 2019 இல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் 2020 இல் கொவிட் -19 தொற்றுநோய் மற்றும் 2022 இல் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி ஆகியவை நாட்டின் சுற்றுலாத் துறையில் பேரழிவுகரமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அதன்பிரகாரம், சுற்றுலாத்துறை அமைச்சும் அதனுடன் இணைந்த நிறுவனங்களும் இலங்கையை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான பிரதான சுற்றுலாத் தலமாக மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன், அதற்கமைவாக, 2022ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தெளிவான அதிகரிப்பை காணலாம். சுற்றுலா மற்றும் காணி அமைச்சுடன் இணைந்து கொள்கை உருவாக்கத்திற்குத் தேவையான பங்களிப்பை வழங்குதல், கருத் திட்ட மதிப்பீடு, அமைச்சரவைப் பத்திரம் மற்றும் துறைசார் அபிவிருத்தித் திட்டங்களுக்கான அவதானிப்புகளை வழங்குவதற்கான பங்களிப்பு என்பன இத்திணைக்களத்தின் சுற்றுலாப் பிரிவின் பிரதான செயற்பாடுகளாகும். அதன் பிரகாரம்,

- சுற்றுலா மற்றும் காணி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பாத்திரம் ஒன்றிற்கு அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டதுடன் 4 கருத் திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- தேசிய சுற்றுலாக் கொள்கை வரைவுக்கான அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டம் - 2050 சுற்றுலாத் துறை தொடர்பான அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- 2022 வரவு செலவு திட்ட முன்மொழிவுக்கான தேசிய வரவு செலவுத் திணைக்களத்திற்கு, ஆசிய அபிவிருத்தி வங்கியின் சுற்றுலாத் துறை கொள்கை மதிப்பீட்டு ஆலோசனை வெளிநாட்டு பணிக்கான (Aid Memoire on ADB Tourism Sector Policy Assessment

Consultation Mission) வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

**கைத்தொழில் பிரிவு**

பொருளாதார அபிவிருத்தி மற்றும் கட்டமைப்பு மாற்றத்தில் கைத்தொழில்மயமாக்கல் முக்கிய பங்கு வகிக்கிறது. கைத்தொழில்மயமாக்கல் மூலம் ஏற்படும் மாற்றம் நாட்டின் பொருளாதார மற்றும் ஏற்றுமதி விருத்தி, வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வறுமைக் குறைப்பு ஆகியவற்றிற்கான பங்களிப்பை வழங்குகின்றன. முதன்மையாக கொவிட்-19 தொற்று காரணமாக விவசாயத் துறை மற்றும் சேவைத் துறையைப் போன்று, கடந்த இரண்டு ஆண்டுகளாக நாட்டின் கைத்தொழில் துறையின் செயல்திறனில் கணிசமான பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன், பல வளர்ந்து வரும் பொருளாதாரங்களுடன் ஒப்பிடும்போது இலங்கையின் கைத்தொழில்மயமாக்கலின் தன்மை திருப்திகரமாக இல்லை. நாட்டின் பெரும்பாலான பிரதான பொருளாதாரத் துறைகளைப் போலவே, தற்போதைய பொருளாதார நெருக்கடியால் இந்த பாதகமான சூழ்நிலை மேலும் மோசமடைந்துள்ளது. அதிக எரிபொருள் செலவு, அதிக நிதி செலவு, மின்வெட்டு, சந்தை பலவீனம் போன்ற காரணங்களால் கைத்தொழில் துறையின் அபிவிருத்தி தடைபட்டுள்ளது. எவ்வாறாயினும், கைத் தொழில்துறையானது தொடர்ச்சியாக நாட்டின் தேசிய பொருளாதாரத்தின் குறிப்பிடத்தக்க பகுதியை உள்ளடக்கியதுடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அண்ணளவாக 26 சதவீதம், மொத்த வேலைவாய்ப்பில் 28 சதவீதம் மற்றும் நாட்டின் மொத்த ஏற்றுமதியில் அண்ணளவாக 80 சதவீதம் பங்களிப்பை வழங்குகிறது.

இந்தப் பின்னணியில், குறைந்தபட்ச பாதகமான சுற்றுச்சூழல் பாதிப்புகளுடன் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பதற்கும், அதிக ஏற்றுமதி வளர்ச்சியை உறுதி செய்வதற்கும், நாட்டின் நிலையான அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்கும், அத்துடன் வீழ்ச்சியடைந்து வரும் கைத்தொழில் உற்பத்தியை மீட்டெடுப்பதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளின் அவசியத்தை தொழில் விருத்திக்கான தேசியக் கொள்கை வலியுறுத்துகிறது.

இதற்கு இணையாக, இலங்கையின் கைத்தொழில் துறையின் போட்டித்தன்மையை அதிகரிக்கும் மற்றும் தொழில்துறை அபிவிருத்திக்கான தடைகளை நீக்கும் நோக்கத்துடன் தேசிய திட்டமிடல் திணைக்களம் 2022 ஆம் ஆண்டு பின்வரும் தொழிற்பாடுகளை பூர்த்தி செய்தது.

- கைத்தொழில் அமைச்சிடம் இருந்து பெறப்பட்ட 28 கருத்திட்ட முன்மொழிவுகளின் மதிப்பீடு.
- கைத்தொழில் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 5 அமைச்சரவைப் பத்திரங்கள் மீதான அவதானிப்புக்களை சமர்ப்பித்தமை
- கைத்தொழில் அமைச்சு மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்களால் முன்வைக்கப்பட்ட புதிய முன்மொழிவுகளை இணைத்து எதிர்காலத்தில் செயற்படுத்தப்பட வேண்டிய கருத்திட்டக் வரிசைகளை (Project Pipe Lines) புதுப்பித்தல்.
- நாட்டின் அபிவிருத்திக் கட்டமைப்பிற்கு ஏற்ப பொருத்தமான கருத்திட்டங்களை உருவாக்க தொழில் அமைச்சு மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு தேவையான ஆலோசனை ஆதரவை வழங்குதல்
- இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசியக் கொள்கையை உருவாக்குதல் மற்றும் 1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க தொழில்துறை ஊக்குவிப்புச் சட்டத்தின் திருத்தம் தொடர்பாக கைத்தொழில் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு ஆவணங்களை மீளாய்வு செய்து தேவையான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை வழங்கியமை.

- இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசியக் கொள்கையை உருவாக்குவது தொடர்பான கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்களில் பங்கேற்று தேவையான ஆலோசனை ஆதரவை வழங்குதல்.
- வழிநடத்தல் குழுக்கள், முன்னேற்ற ஆய்வுகள் மற்றும் வெளிநாட்டுப் பணிகள் உள்ளிட்ட கூட்டங்களில் செயற்பாட்டு ரீதியில் பங்கேற்றல்.

## வர்த்தகப் பிரிவு

கடந்த காலப்பகுதியில், இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது உலகளாவிய பொருளாதார முன்னேற்றங்கள் மற்றும் 2020 ஆம் ஆண்டின் முதல் பாதியில் பரவிய உலகளாவிய தொற்றுநோய் நிலைமை ஆகியவற்றால் சவாலிற்கு உட்படுத்தப்பட்டது. நமது வெளிநாட்டுத் துறையினுள் கடந்த பல ஆண்டுகளாக நல்ல விருத்தி காணப்படாமையால், வர்த்தகப் பற்றாக்குறை தொடர்ந்து அதிகரித்து காணப்படுகிறது. எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டில், எமது வர்த்தக இருப்பு 2021 இல் காணப்பட்ட 8,139 மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 5,185 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இறக்கத்தை காட்டியதுடன், இப் பொருளாதார மந்தநிலை காரணமாக, 2021 உடன் ஒப்பிடும்போது ஏற்றுமதி 36.4% குறைந்துள்ளதுடன் இறக்குமதி 7.7% ஆக குறைவடைந்துள்ளது.

காணப்படுகின்ற பொருளாதார பின்னடைவு மற்றும் பொதுச் செலவினங்களின் இறுக்கமான கட்டுப்பாட்டின் மத்தியில் இலங்கையின் தேசிய மற்றும் சர்வதேச வர்த்தக சமநிலையானது 2022 இல் சரிவுக்கு முகம் கொடுத்தது. எனவே இத்துறைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பொது நிதியின் பங்களிப்பு வெகுவாகக் குறைக்கப்பட்டதால் இத்துறை தொடர்பாக எமது திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகள் அதற்கு முன்னுரிமை அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அக் கருத்திட்டங்களை மாற்று நிதி ஊடகங்களினூடாக நடைமுறைப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இதன் பிரகாரம், பிரதான அமைச்சு மற்றும் கருத்திட்டங்களை அமுல் படுத்தும் நிறுவனங்களுடன் கலந்துரையாடி வெளிநாட்டு முதலீட்டிற்கான அதிக சாத்தியமுள்ள கருத் திட்ட முன்மொழிவுகள் வெளிநாட்டு நன்கொடைகளை பெறுவதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. இங்கு இலங்கையில் நடைமுறையில் உள்ள இறக்குமதிச் சந்தையை மேலும் பல்வகைப்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்துதல் ஆகியவற்றை முதன்மை நோக்கங்களாகக் கொண்டு, இ-வர்த்தக செயற்பாடுகள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் போன்ற உட் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, 2022 ஆம் ஆண்டிற்கான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் வர்த்தகப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு.

- வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட 07 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புகளை எமது திணைக்களம் சமர்ப்பித்தது.

- பிரதான அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட 06 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு வெளிநாட்டு வளங்கள் மூலம் நிதி ஒதுக்கீடுகளைப் பெறுவதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

- துறையினுள் காணப்படுகின்ற புதிய தேவைகளைக் கருத்திற்கொண்டு 2018-2022 தேசிய இறக்குமதி மூலோபாயத் திட்டத்தை 2024-2028 ஆம் ஆண்டிற்கான புதிய தேவைகளை கருத்தில் கொண்டு திருத்தியமைப்பதற்கு சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டதுடன் அதற்கு தேவையான பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

- நாட்டில் ஏற்பட்டுள்ள அவசர நிலைமையை கருத்திற் கொண்டு, அதற்கான பொருத்தமான கருத் திட்டங்களை தயாரிப்பது தொடர்பாக வர்த்தக அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய நிறுவனங்களுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

## 2.2. விவசாயம், நீர்ப்பாசனம், காணி, கால்நடைகள், மீன்பிடி, பெருந்தோட்டம், சுற்றாடல் மற்றும் இடர் முகாமைத்துவம்

### விவசாயப் பிரிவு

நாட்டின் சனத் தொகையில் நான்கில் ஒரு பகுதியினரை விட அதிகமானோரின் பிரதான தொழில் விவசாயம் ஆகும். நாட்டின் மொத்த நிலப்பரப்பில், அண்ணளவாக 40% நிலம் பயிர்ச் செய்கைக்கு ஏற்றதுடன், இதில் அண்ணளவாக 65% (1.9 மில்லியன் ஹெக்டேர்) நிலத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது . நாட்டின் மொத்த நிலப்பரப்பில், அண்ணளவாக 40% நிலம் பயிர்ச் செய்கைக்கு ஏற்றதுடன், இதில் அண்ணளவாக 65% (1.9 மில்லியன் ஹெக்டேர்) நிலத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது. விவசாய ஏற்றுமதி வருவாய் தற்போது சுமார் 2,500 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (ஆண்டு அறிக்கை, CBSL-2020) இது நாட்டின் மொத்த ஏற்றுமதி வருவாயில் கிட்டத்தட்ட 20% ஆகும்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டை அடைதல் என்பன விவசாயக் கொள்கையின் இரண்டு முக்கிய அம்சங்களாகும். இப் பகுதியில் அரசாங்கக் கொள்கையில் அதிக உற்பத்தித்திறன், தொழில்நுட்பம் சார்ந்த நிலையான மற்றும் இலாபகரமான விவசாயத் துறை மற்றும் அதன் மூலம் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதினூடாக உணவின் தரத்தை ஏற்படுத்துவத்தினூடாக சர்வதேச சந்தையில் விவசாய பொருட்களின் போட்டித்தன்மையை அதிகரிப்பது பிரதானமாக கவனம் செலுத்தப்படுகிறது.

### பயிர் விவசாயம்

பயிர் விவசாயத் துறையானது மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக காணப்படுகின்ற இயலளவு காரணமாக 2022 ஆம் ஆண்டில் சிறப்பு முக்கியத்துவம் பெற்றது. கொவிட் தொற்றுநோய், பாதகமான காலநிலை மற்றும் உற்பத்தி உள்ளீடுகளின் விலை உயர்வு காரணமாக விநியோகச் சங்கிலியின் இடையூறு காரணமாக உலகளாவிய உணவு நெருக்கடி உள்நாட்டு உணவு சந்தையை மோசமாக பாதித்துள்ளது. மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, அரசாங்கத்தினால் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், சந்தை இயக்கவியலை சீரமைப்பதற்கும் விவசாயத் துறையில் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. விவசாய உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு விவசாயத்தில் பயன்படுத்தும் உபகரணங்கள் குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய குழுக்கள்/விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. எதிர்கால தொழில்முனைவோருக்குச் சந்தைப் போட்டித்தன்மையை உருவாக்க சலுகைக் கடன்கள் மற்றும் தொடர்புடைய நிதி வசதிகளை வழங்குவதன் மூலம் சந்தை ஆற்றலை வலுப்படுத்தியது.

மேலும், விவசாய உற்பத்திப் பொருட்களை வலுப்படுத்துவதற்கு மற்றும் ஏற்றுமதி போட்டித்தன்மையை உறுதி செய்வதற்கும் அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. உணவுப் பயிர் உற்பத்தியை அதிகரிக்கவும் சோளம், உருளைக்கிழங்கு, வெங்காயம், நிலக்கடலை, மிளகாய், எள், கௌபி, உளுந்து, தினை மற்றும் சோயாபீன் ஆகியவற்றை தன்னிறைவு நிலைக்குக் கொண்டு வருவதற்கு கூடிய கவனம் செலுத்தப்படுவதுடன், அதன் மூலம் இறக்குமதிக்கான அந்நிய செலாவணிச் செலவைக் குறைக்கவும் அதிகளவு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வீட்டு மட்டத்தில் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை மேம்படுத்த வீட்டுத் தோட்டச் செய்கை ஊக்குவிக்கப்பட்டது. ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்ட

வர்த்தக ரீதியான பயிர் உற்பத்தியை ஊக்குவித்தல் மற்றும் புதிய சந்தைகளை இனங்காண்பதற்குத் தேவையான வசதிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. மேலும், சந்தை மதிப்பு சங்கிலியின் விநியோக உள்கட்டமைப்பை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. விவசாய மதிப்புச் சங்கிலி தொடர்பான சிக்கல்களைத் தீர்த்து விவசாயம், அறுவடை செய்தல், அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவம், மதிப்புக் கூட்டல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய துறைகளில் தொழில்நுட்பப் பரவலை விருத்தி செய்வதில் அவதானம் செலுத்தப்படுகிறது.

## நிறைவேற்றப்பட்ட பணிகள்

- 13 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் அவதானிப்புகள் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களங்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- விவசாய அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 12 அமைச்சரவைப் பத்திரங்கள் மீதான அவதானிப்புகள் மற்றும் தொழில்நுட்பக் கருத்துக்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## விசேட செயற்பாடுகள்

- “Inclusive Rural livelihood transformation Project” எனும் பெயரில் கிராமப்புற வாழ்வாதாரத்தை விருத்தி செய்வதற்கு கருத்திட்டக் கருத்துருவைத் தயாரித்து உலக வங்கி நிதியுதவிக்கு சமர்ப்பித்தல்.
- இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைப் பேரவை (SLCARP) ஏற்பாடு செய்திருந்த தேசிய விவசாய ஆராய்ச்சித் தொகுதி மற்றும் தொடர்புடைய அமைச்சுகளின் அதிகாரிகளுடன் நடைபெற்ற உரையாடலில் பங்குதாரராகப் பங்கேற்றமை.
- “Inputs Requirement for Agriculture Food/Crop Production – Maha 2022/23” பற்றிய அறிக்கையை தயாரித்து ஜனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பித்தல்.
- ஜனாதிபதி செயலகத்தின் உணவுப் பாதுகாப்புப் பிரிவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் “Fertilizer Requirement for Maha/Next 6 Months (June-Dec)” தொடர்பான அறிக்கையை தயாரித்து ஜனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பித்தல்.
- ஜனாதிபதி செயலகத்தின் உணவுப் பாதுகாப்புப் பிரிவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் “” பற்றிய அறிக்கையை தயாரித்து ஜனாதிபதி செயலகத்தில் சமர்ப்பித்தல்.
- “Sri Lanka: Emergency Recovery and Restoring Macroeconomic and Social Stability Emergency Action Plan” போன்ற அபிவிருத்தி பங்குதாரர்களுக்கு முன்வைக்க இலங்கைக்கான அவசர செயல் திட்டத்தை தயாரிப்பதற்கு தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டது.
- சிறு விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு எரிபொருள் விநியோகத்திற்காக சீனா மற்றும் ஐக்கிய அமெரிக்காவிடம் இருந்து உதவி பெறக் கருத்திட்டக் கருத்துருவைத் தயாரித்து சமர்ப்பித்தல்.
- ஜனாதிபதி செயலகத்தின் உணவுப் பாதுகாப்புப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட “உணவுப் பாதுகாப்பு மற்றும் போசனைக்கான” நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான பங்குதாரர்களின் கூட்டங்களில் பங்கேற்றமை.
- "உள்நாட்டு நுகர்வுக்கு அரிசியின் கிடைப்பனவு” என்ற தலைப்பில் ஆய்வு நடத்தி அறிக்கை தயாரித்து ஜனாதிபதி செயலகத்தில் சமர்ப்பித்தமை.
- ஜனாதிபதி செயலகத்தின் உணவுக் கொள்கைக் குழுக் கூட்டங்களில் பங்கேற்று தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கியமை.

## கால் நடைப் பிரிவு

கால்நடைத் துறையானது, குறிப்பாக நாட்டின் கிராமப்புறங்களில் சுமார் 1.6 மில்லியன் மக்கள்தொகைக்கு போசாக்கு, உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கு பங்களிக்கும் ஒரு முக்கிய துணைத் துறையாகும். மொத்த தேசிய உற்பத்தியில் 1% க்கும் குறைவான பங்களிப்பை வழங்கினாலும், இத்துறைக்கான தொழிலாளர் தேவையின் காரணமாக, கிராமப்புற வேலை வாய்ப்பு உருவாக்கம், வறுமை ஒழிப்பு மற்றும் அதன் மூலம் பொருளாதார மேம்பாட்டிற்குப் பயன்படும் முக்கிய துறைகளில் இதுவும் ஒன்றாகும். இத்துறை பிரதானமாக கால்நடைகள், எருமைகள், ஆடுகள், கோழிகள் மற்றும் பன்றிகளை வளர்ப்பதை உள்ளடக்கியது. நாட்டில் சுமார் 600,000 பதிவு செய்யப்பட்ட விலங்கு பண்ணைகள் உள்ளன. மேலும் 250,000 பால் பண்ணையாளர்கள் உட்பட சுமார் 600,000 குடும்ப அலகுகள் நேரடியாக இத்துறையில் ஈடுபட்டுள்ளன.

தற்போது, உள்நாட்டில் திரவ பால் உற்பத்தி சுமார் 427 மில்லியன் லிட்டராக உள்ளதுடன், இது நாட்டின் மொத்த கேள்வியில் 50 சதவீதத்தை பூர்த்தி செய்ய போதுமானதாகும். எனவே உற்பத்தியை அதிகரிக்கவும், உள்ளூர் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் ஒருங்கிணைந்த வணிகமயமாக்கப்பட்ட விவசாயத்தை நோக்கி மாற்றம் இத்துறைக்கு அவசியமாகும். இதற்காக, உள்நாட்டு மற்றும் கலப்பின விலங்கு இனங்களைப் பயன்படுத்தி வெற்றிகரமான இனப்பெருக்க முறைகள் மற்றும் வருடம் முழுவதும் விலங்குகளின் உணவு கிடைப்பதற்கு விரிவான அணுகுமுறைகள் தேவை.

கோழி வளர்ப்புத் தொழில் முற்றிலும் தனியார் துறையால் இயக்கப்படுவதுடன், இதனால் கோழி இறைச்சி மற்றும் முட்டைக்கான உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்ய முடியும். பெரும்பாலும் கோழிகளின் ஆரோக்கியத்தை நிர்வகிப்பதற்கான வேலைத் திட்டங்களை செயற்படுத்தல், இத்துறையை மேலும் ஸ்திரப்படுத்துவதற்கான ஆராய்ச்சி மற்றும் கொள்கை மேம்பாடு ஆகியவற்றில் மாத்திரம் அரசாங்கத்தின் பங்கு வரையறுக்கப்பட்டுள்ளது. கோழி மற்றும் முட்டைகள் இலாபகரமான விலங்குப் புரத மூலமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் , நாட்டின் விலங்கு புரதத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு உற்பத்தி செலவைக் குறைத்து உற்பத்தியை அதிகரிப்பது அத்தியாவசியமாகும்.

### நிறைவேற்றப்பட்ட பணிகள்

- 04 கருத் திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன.
- கால்நடைத் துறை தொடர்பான 3 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அமைச்சரவை அவதானிப்புகள் மற்றும் தொழில்நுட்பக் கருத்துக்கள் அமைச்சரவைக்கு சமர்பிக்கப்[பட்டுள்ளன.

### விசேட செயற்பாடுகள்

"விலங்கு வளர்ப்பை மேம்படுத்துவதன் மூலம் உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரித்தல்" எனும் தலைப்பில் வரவு செலவுத் திட்ட முன்மொழிவை தயாரித்து 2022 வரவு செலவுத் திட்ட உரையில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கை எடுத்தமை.

## காணி மற்றும் நீர்ப்பாசனப் பிரிவு

நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், புதிய நீர் மூலங்களை விருத்தி செய்வதற்கு, இருக்கும் நீர் மூலங்களை விருத்தி செய்வதற்கும், பொருத்தமான, சமமான நீர் விநியோகத்தை உறுதி செய்வதில் நீர்ப்பாசனத் துறை இன்றியமையாதது. நீர்வள அபிவிருத்தியின் கீழ், ஏற்கனவே மொரகஹகந்த, களுகங்கை நீர்த்தேக்க அபிவிருத்தித் திட்டம், உமாஓயா நீர் திசை திருப்பும் திட்டம் போன்ற பாரிய அபிவிருத்தித் திட்டங்களின் இறுதிக்

கட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதேநேரம், பல புதிய கருத்திட்டங்கள் விவசாய மற்றும் ஏனைய நீர்த்தேவைகளுக்கு நீர் வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இதன் கீழ் மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம், மல்வத்து ஓயா நீர்த்தேக்க கருத்திட்டம், தல்பிட்டிகல நீர்த்தேக்க கருத்திட்டம், ஒருங்கிணைந்த நீர் உதவி மற்றும் நீர்வள முகாமைத்துவக் கருத்திட்டம் என்பன பல கட்டங்கள் காலநிலை பாதிப்பைக் குறைப்பதற்கான பல நோக்குத் திட்டங்களில் முதன்மையானவையாகும். எவ்வாறாயினும், நாட்டின் தற்போதைய நிதி நிலைமையைக் கருத்திற் கொண்டு, இந்த திட்டங்களை செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் அவசியமான மாற்று வழிகளுடன் மீள் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அதன் நேரடி பங்களிப்பின் காரணமாக எல்லன்கா அபிவிருத்தி மூலம் நீர் வள அபிவிருத்தி ஒரு முக்கிய தலையீடாக இனங்காணப்பட்டுள்ளது. மேலும், நீர் விரயமாவதை தடுப்பதற்கு நீர் இடமாற்றத் தொகுதிகள் விருத்தி செய்யப்பட்டு அல்லது சீரமைக்கப்பட்டுக் காணப்படுகின்றன. மனிதர்களிற்கு மற்றும் பயிர்ச் செய்கைகளிற்காக நீர்ப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக நிலத்தடி நீர் பயன்பாடு மற்றும் மழைநீர் சேகரிப்பு என்பவை ஆராயப்படுகின்றன.

## காணி வளங்கள்

பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட காணிகளை திறனான பயன்பாட்டிற்காக கொண்டு வருதல் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான அடிப்படைத் தேவையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நில வளங்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பது போட்டித்திறன் மற்றும் வருமானத்தை அதிகரிப்பதில் பிரதானமான காரணியாகும். எனவே சிறந்த பதலீட்டிற்காக காணியைப் பயன்படுத்துவது மற்ற உள்ளீட்டுத் தேவைகளுடன் பொருளாதாரத்தை உயர்த்த உதவுகிறது. காணி வங்கியின் அணுகுமுறை முக்கியமாக முதலீடு மற்றும் பொருளாதாரத்தில் வளர்ச்சியை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இக்கருத்து பிரதானமான நிறுவனமான காணி அமைச்சினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், தொடர்புடைய அனைத்து பங்குதாரர்களினது பங்களிப்பும் பெறப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, "பிம்சவிய" வேலைத்திட்டம் கடந்த சில வருடங்களாக செயற்படுத்தப்பட்டு வருவதுடன், பிரதானமாக காணிப் பயன்பாடு மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, மிகவும் வலுவான மற்றும் தெளிவான காணி உரிமையை வழங்குவதற்காக, காணி உரிமை அல்லது எல்லைகள் தொடர்பான தேவையற்ற சர்ச்சைகளைத் தவிர்ப்பதாகும். தேவையான நிர்வாக மற்றும் சட்டத் திருத்தங்களுடன் காணி கையகப்படுத்தும் செயன்முறை விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

சுற்றுலா, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்களுடன் இணைந்து கொள்கை உருவாக்கத்திற்கான பங்களிப்பை வழங்குதல், கருத்திட்ட மதிப்பீடு, அமைச்சரவைப் பத்திரங்களைக் கருத்திற் கொண்டு அவற்றிற்கான அவதானிப்புகளை வழங்குதல் என்பன இத்துறையினால் வழங்கப்படுகின்ற பிரதானமான பங்களிப்புக்களாகும்.

## நிறைவேற்றப்பட்ட பணிகள்

- காணி மற்றும் நீர்ப்பாசனத் துறைகள் தொடர்பான 12 கருத் திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- சுற்றுலா, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 25 அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டு வேலைத்திட்டம், ஒருங்கிணைந்த நீர் உதவி மற்றும் நீர்வள முகாமைத்துவ கருத் திட்டம், காலநிலை பாதிப்புக்களை

குறைப்பதற்கான பல் நோக்கு வேலைத்திட்டம் ஆகியவற்றின் வழிநடத்தல் குழுக் கூட்டங்களில் பங்கேற்றமை.

- தற்பொழுது நடைமுறையில் உள்ள அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் கொள்கை ஆய்வுக் கூட்டங்களில் பங்கேற்றமை.
- தற்பொழுது நடைமுறையில் உள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்களுடன் தொடர்புடைய Aide Memoire க்கான அவதானிப்புகளை வழங்குதல்.

## பெருந்தோட்டப் பிரிவு

நாட்டின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் பெருந்தோட்டத் துறையின் பங்களிப்பு சுமார் 27 சதவீதமாகவும், பெருந்தோட்டத் துறையுடன் தொடர்புடைய வாழ்வாதாரத்தை மேற்கொள்பவர்கள் சுமார் 1.5 மில்லியனாகவும் உள்ளனர்.

பெருந்தோட்டத்துறையின் பிரதான அமைச்சான பெருந்தோட்ட அமைச்சுக்கு தேவையான துறைசார் கொள்கை ரீதியிலான விடயங்களுக்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்குவதும், அவ்வமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பான கருத்திட்ட பகுப்பாய்வு, பரிந்துரைகள் வழங்கப்படுவதுடன் கருத்திட்ட திட்டமிடலிற்கான தொழில்நுட்ப விடயங்களை வழங்குவதும் இத்திணைக்களத்தின் பிரதான பணியாகும். பெருந்தோட்டத் துறையின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலம், பெருந்தோட்டத் துறையுடன் தொடர்புடைய வாழ்வாதாரத்தை ஈட்டும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தல் மற்றும் அரசாங்க கொள்கைகளுக்கு இனங்க பெருந்தோட்ட கருத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஆதரவையும் தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குதல் இந்த பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

### நிறைவேற்றப்பட்ட விஷேட பணிகள்

- அரசாங்கத்தின் 10 வருட திட்டத்தின் பெருந்தோட்டத் துறை அத்தியாயத்தை தயாரித்தல் மற்றும் நிறைவு செய்தல்.
- கருத்திட்ட அறிக்கைகளை மதிப்பீடு செய்வது தொடர்பான அமைச்சு திணைக்களங்கள் மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்களுடன் 06 கூட்டங்களை ஏற்பாடு செய்தமை.
- உலக வங்கியின் நன்கொடைகளைப் பெறுவதற்கான கருத் திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்குத் தேவையான பங்களிப்பை வழங்குதல்.
- Aid Memorie, Country Diagnosis Studies (CDS) தேவையான அவதானிப்புக்களை வழங்கியமை.
- செயற்பாட்டுக் குழுக் கூட்டங்களில் பங்களிப்புக்களை வழங்கியமை.
- விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டம் (ASMP) தொடர்பாக கள ஆய்வு நடத்தி, கள ஆய்வு அறிக்கையைத் தயாரித்து, தொடர்புடைய நிறுவனங்களுக்கு இது தொடர்பான பரிந்துரைகளை வழங்கியமை.

### முன்னேற்றம் 2022

| | |
|---|---|
| பெறப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை | 43 |
| மதிப்பீடு செய்த கருத்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை | 43 |
| பெறப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்களின் எண்ணிக்கை | Ob-02 Co- 02 |

| | |
|---|---|
| அவதானிப்பு வழங்கிய அமைச்சரவைப் பத்திரங்களின் எண்ணிக்கை | Ob-02 Co- 02 |

## மீன்பிடிப் பிரிவு

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மீன்பிடித் துறையின் பங்களிப்பு சுமார் 1 சதவீதமாக உள்ளதுடன் அண்ணளவாக 2.8 மில்லியன் மக்கள் மீன்பிடித் துறையிலிருந்து தங்கள் வாழ்வாதாரத்தை ஈட்டுகின்றனர்.

மீன்பிடித் துறையின் பிரதான அமைச்சான மீன்பிடி அமைச்சு மற்றும் மீன்பிடித் துறை தொடர்பான இராஜாங்க அமைச்சுக்களுக்குத் தேவையான துறைசார் கொள்கை விடயங்களுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான கருத்திட்ட பகுப்பாய்வு, பரிந்துரைகள் மற்றும் கருத்திட்ட திட்டமிடல் என்பவற்றுக்கு தேவையான தொழில்நுட்ப தகவல்களை வழங்குதல் என்பன இத்துறையின் பிரதான செயற்பாடுகளாகும். மீன்பிடித் துறையின் உற்பத்தி, உற்பத்தித்திறன் மற்றும் உட்கட்டமைப்பை அதிகரிப்பதன் மூலம், மீன்பிடித் துறையுடன் தொடர்புடைய மக்களின் வாழ்வாதாரம் பாதுகாப்பதுடன், அரச கொள்கைகளுக்கு அமைவாக மீன்பிடிக் கருத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஆதரவு மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்குதல் இத்துறையின் பிரதான செயற்பாடுகளாகும்.

## நிறைவேற்றப்பட்ட விஷேட பணிகள்

- அரசாங்கத்தின் 10 வருட அபிவிருத்தித் திட்டத்தின் மீன்வளத் துறை அத்தியாயத்தைத் தயாரித்து பூரணப்படுத்தல்.
- வடமாகாண நிலையான மீன்பிடி அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த பங்களிப்பை வழங்குதல்.
- உலக வங்கியின் நன்கொடைகளைப் பெறுவதற்கான கருத் திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்குத் தேவையான பங்களிப்பை வழங்குதல்.
- கருத்திட்ட அறிக்கைகளை மதிப்பீடு செய்வது தொடர்பான அமைச்சின் திணைக்களங்கள் மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்களுடன் 08 கூட்டங்கள் ஒழுங்கமைத்தல் மற்றும் நிகழ்த்தியமை.
- Aid Memorie, Country Diagnosis Studies (CDS) தேவையான அவதானிப்புக்களை வழங்கியமை.
- JICA நிறுவனத்துடன் கருத்திட்ட அறிக்கைகள் தயாரிப்பது தொடர்பாக மீன்பிடி அமைச்சின் அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நிகழ்த்தியமை.

## முன்னேற்றம் 2022

| | |
|---|---|
| பெறப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை | 6 |
| மதிப்பீடு செய்த கருத்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை | 6 |
| பெறப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்களின் எண்ணிக்கை | Ob-2 Co- 04 |
| அவதானிப்பு வழங்கிய அமைச்சரவைப் பத்திரங்களின் எண்ணிக்கை | Ob-2 Co- 04 |

## சுற்றாடல் முகாமைத்துவம்

குறித்த முதலீடுகளைச் செய்வதன் மூலம் வலுவான பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதுடன், சுற்றாடல் தரத்தை உறுதி செய்வதன் மூலம் நிலையான அபிவிருத்தியில் கவனம் செலுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் சுற்றாடல் முகாமைத்துவம் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. மாசற்ற சுற்றாடலையும், நச்சுப்பொருளற்ற உணவுப் பழக்கத்தையும் உறுதி செய்வதற்காக சுற்றுச்சூழல் கொள்கையில் பசுமை அபிவிருத்தி என்ற கருத்து முக்கிய பங்கு வகிக்கிறது. குறைந்தபட்ச கார்பன் நுகர்வுடன் சுத்தமான பசுமையான சுற்றாடலை ஏற்படுத்தல், சுற்றாடல் மாசடைதலைக் குறைத்தல், உயர் பல்லுயிர் மற்றும் சுற்றாடல் சேவைகள், சுற்றாடல் அபாயத்தைக் குறைத்தல், திறமையான மற்றும் நிலையான வள நுகர்வு மூலம் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், சுற்றாடல் தரத்தை மேம்படுத்தல் மற்றும் இயற்கை அனர்த்தங்களின் விளைவுகளைக் குறைத்தல் போன்ற பிரச்சினைகளில் சுற்றாடல் முகாமைத்துவப் பிரிவு கவனம் செலுத்தியுள்ளது. நிலையான அபிவிருத்தியை அடைவதற்கு சிறந்த சுற்றாடல் முகாமைத்துவம் மிக முக்கியமான தேவையாகும். எனவே, அபிவிருத்தித் திட்டமிடலில், சுற்றாடல் சமநிலையைப் பேணுவதற்கு அவசியமான பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புக்களுக்கு உரிய கவனம் செலுத்துவது அவசியமாகும்.

சுற்றாடல் முகாமைத்துவப் பிரிவானது அடைவதற்கு எதிர்பார்த்துள்ள சில பிரதான நடுத்தர இலக்குகளாக 1) விவசாயம், கால்நடை வளர்ப்பு, பெருந்தோட்டம், நிலையான காணிப் பயன்பாடு என்பவற்றுக்கான தேசிய பௌதிகத் திட்டத்தை மீள் மதிப்பாய்வு செய்து தயாரித்தல், 2) 2023 ஆம் ஆண்டிற்குள் 3000 ஹெக்டயர் வன அடர்த்தியை பராமரிப்பதற்கு 1220 ஹெக்டேர் வனப்பகுதி மற்றும் 2150 ஹெக்டயர் வனப்பகுதிகளை மீள் புனரமைத்தல், 3) 2023 ஆம் ஆண்டுக்குள் 1000 ஹெக்டயர் வனப்பகுதியை மீள் புனரமைத்தல், 1600 ஹெக்டயர் வன முகாமைத்துவம், 4) ஈரநிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்களில் மனித தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உணர்திறன் வாய்ந்த சுற்றாடல் தொகுதியைப் பாதுகாத்தல், 5) 3R (குறைத்தல், மீள் பயன்பாடு மற்றும் மீள் சுழற்சி) சுற்றாடல் - தொழில்துறை மண்டலங்களை நிறுவுவதன் மூலம் கழிவு உற்பத்தி/கழிவு வகைப்பாடு பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல் மற்றும் வீடு/தொழில் மட்டத்தில் கழிவுகளை வகைப்படுத்துதல் மற்றும் பிரித்தல் ஆகியவற்றை கட்டாயமாக்குதல், 6) கடற்சூழலை மாசடைதலிலிருந்து பாதுகாப்பதற்கு ஒரு செயற்திட்டத்தை உருவாக்குவதன் கடற்கரைப் பகுதிகள் மற்றும் கடற்சூழலை பாதுகாத்தல் மற்றும் 7) திடக்கழிவு சேகரிப்பு மற்றும் அகற்றல் தொகுதிகளை நிறுவுதல் (மருத்துவ மற்றும் தொழிற்சாலை கழிவுகளை அகற்றுவதற்கு உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களிற்கு மற்றும் எரியூட்டிகளிற்கு கழிவகற்றளிற்கான நிலப்பரப்புகளை அறிமுகப்படுத்துதல்).

## நிறைவேற்றப்பட்ட விஷேட பணிகள்

- சுற்றாடல் அமைச்சு, வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பிற தொடர்புடைய அமைச்சுக்களால் பரிந்துரைக்கப்பட்ட 53 கருத்திட்ட முன்மொழிவுகளுக்கான அவதானிப்புக்களை வழங்குதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- தேசிய சுற்றாடல் கொள்கை, இரசாயனப் பதார்த்த முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கை, ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் கூட்டு கார்பன் கடன் பொறிமுறையை (JCM) நடைமுறைப்படுத்துதல், இரசாயனப் பதார்த்த முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கை உட்பட தொடர்புடைய அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 16 அமைச்சரவைப் பத்திரங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டமை.

- UNESCAP ஆல் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கைக்கான பசுமைப் பிணைப்பு கட்டமைப்பிற்கான (Green Bond Framework- ZERO DRAFT) வரைவில் திருத்தங்கள் மேற்கொள்ளல்.
- ஐரோப்பிய ஒன்றியத்தால் (EU) நிதியளிக்கப்பட்ட பசுமைக் கொள்கை உரையாடல் வசதித் திட்டத்திற்கான (Green Policy Dialogue Facility Project) யோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல்.
- இலங்கைக்கான கார்பன் நிகர பூச்சிய சாலை வரைபடம் மற்றும் மூலோபாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனங்களின் தொழில்நுட்ப திறனை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களிற்கான யோசனைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.
- சமுத்திர நாடுகளின் பங்குடைமை வேலைத் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (Blue Planet Fund- Ocean Country Partnership Program) (BPF –OCPP), வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழகம் (Cornell University) ஆகியவற்றுடன் இருநாட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கான கருத்துகள் மற்றும் முன்மொழிவுகள் வழங்கியமை.
- இலங்கை அரசாங்கத்திற்கும் உலகளாவிய பசுமை விருத்தி நிறுவனத்திற்கும் (Global Green Growth Institute - GGGI) இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கியமை.
- USAID சமுத்திர பிளாஸ்டிக் குறைப்பு நடவடிக்கையுடன் ව්‍යාපෘතිය (USAID Ocean Plastic Reduction Activity) தொடர்புடைய கருத்திட்டத்திற்காக குறித்த பங்குதார நிறுவனங்களுடன் அடிப்படை வேலைகளை ஆரம்பித்தல்.
- காலநிலை நிதி வலையமைப்புடன் (Climate Finance Network) தொடர்புடைய கருத் திட்ட முன்மொழிவை மேலும் விருத்தி செய்வதற்கு நிதி அமைச்சின் தேவைகளுக்கு ஏற்ப முன்மொழிவுகளை வழங்குதல்.
- சுற்றாடல் முகாமைத்துவப் பிரிவின் கீழ் கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குதல்.
- கொள்கைகள் மற்றும் உத்திகளை உருவாக்குவதற்கு தொடர்புடைய பிரதான அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு தேவையான தொழில்நுட்ப ஆதரவை வழங்குதல்.
- வெளிநாட்டுப் பணிகள் தொடர்பான விடயங்களிற்கு கருத்துக்கள் வழங்குதல்.

## இடர் முகாமைத்துவம்

இடரை எதிர்கொள்வதற்கு வளங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் வழிநடத்துதல் இடர் முகாமைத்துவம் எனலாம். மேலும், இது தொடர்பான பொறுப்பு, இடர்களிற்கு முகங்கொடுப்பவர்கள், தனியார் துறை நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், தன்னார்வ உத்தியோகத்தர்கள் , நன்கொடையாளர்கள் அனைவரின் பாத்திரங்களும் பொறுப்புகளும் நன்கு ஒருங்கிணைந்த முறையில் செய்யப்பட வேண்டும். இடர் முகாமைத்துவத்தின் பிரதான நோக்கம் அதற்கேற்ற விதத்தில் தயார்படுத்தல், பதிலளித்தல், மீண்டும் சிறந்த நிலைக்கு கொண்டு வருதல் மற்றும் இழிவாக்குவதன் மூலம் நிகழக்கூடிய பாதகமான விளைவுகளை குறைப்பதாகும்.

தற்போதைய அபிவிருத்திக் கொள்கைக் கட்டமைப்பிற்கு அமைவாக, பிராந்திய அபிவிருத்தித் திட்டத்திற்கு இடர் அபாயத்தைக் குறைப்பதன் முக்கியத்துவத்தைக் கவனத்திற் கொள்வதுடன் நிறுவன அபிவிருத்தி பல் ஆபத்து முன்னெச்சரிக்கை தொகுதியின் கீழ் இடர் முகாமைத்துவத்திற்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. அந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் வருடாந்தம் சுமார் 4 பில்லியன் ரூபாவைச் செலவிடப்படுகிறது. மேலும், செண்டாய் கட்டமைப்பு போன்ற சர்வதேச கடமைகளுக்கு இணங்க, இடர் அபாயத்தைப் புரிந்துகொள்வது, இடர் அபாய கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதினூடாக இயற்கை அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட அல்லது சுற்றாடல், தொழில்நுட்ப மற்றும் உயிரியல் காரணங்களால் ஏற்படுகின்ற அபாயங்கள் அனைத்து விதத்திலும் குறைப்பதற்கு எதிர்ப்பார்ப்பதுடன் அதன் மூலம் இடர் அபாயத்தை குறைப்பதற்காக முதலீடு செய்தல், திறனான பதிலளிப்பிற்காக இடர் தயார்நிலையை மேம்படுத்தல், மீட்பு, மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு ஆகியன எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## பிரதானமான நடுத்தர கால இலக்குகள்.

மண்சரிவு அபாய மதிப்பீட்டு சான்றிதழ்களை வழங்குதல், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன ஆய்வுகூட வசதிகளை விரிவாக்கம் செய்தல், மண்சரிவு ஆய்வுகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, மண்சரிவு அபாய விவரத்தை உருவாக்குதல், நிகழ்நேர மண்சரிவு முன்னறிவிப்பின் திறனை அதிகரிப்பது மற்றும் தானியங்கி மழை அளவீட்டு வலையமைப்பை விரிவுபடுத்துவதன் மூலம் முன்கூட்டியே எச்சரிக்கை செய்தல், பொருத்தமான இடர் குறைப்பு நடவடிக்கைகள் மூலம் மண் சரிவு அபாயத்தைக் குறைத்தல், தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் இலங்கையில் இரசாயன அனர்த்த அபாயங்கள் பற்றிய முறையான தீர்ப்பு மதிப்பீட்டின் ஆரம்பத்தை தொடர்தல், 2030 இல் செண்டாய் கட்டமைப்பின் இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல், இடர் முகாமைத்துவத் திட்டங்களை தயாரிப்பதற்கு தனியார் துறையின் உள் திறன்கள் மற்றும் வளங்களை விருத்தி செய்வதற்காக வங்கிகள், கைத்தொழில்கள் மற்றும் பிற அரசு நிறுவனங்களுக்கு இடையே (குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை) ஒருங்கிணைப்பு மற்றும் வசதிகள் மூலம் பொருத்தமான பொறிமுறையை அமைத்தல் என்பன சில நடுத்தர கால இலக்குகளாகக் குறிப்பிடலாம்.

## நிறைவேற்றப்பட்ட விஷேட பணிகள்

- இடர் முகாமைத்துவம் தொடர்பான பிரதான அமைச்சுக்களால் பரிந்துரைக்கப்பட்ட 03 கருத்திட்ட முன்மொழிவுகளின் மதிப்பீடு.
- தேசிய தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பு இழப்பு (Loss and Damage NDC Implementation and Monitoring Plan) மற்றும் சேதம் செயற் படுத்துதல் மற்றும் கண்காணிப்பு திட்டம் (இழப்பு மற்றும் சேதம் NDC அமுலாக்கம் மற்றும் கண்காணிப்பு திட்டம்) ஆகியவற்றிற்கான அவதானிப்பை வழங்குதல்.
- 2023 - 2030 தேசிய இடர் முகாமைத்துவத் திட்டத்தை தயாரிப்பதற்கான ஆதரவை வழங்குதல்.
- கொள்கைகள் மற்றும் உத்திகளை உருவாக்குவதற்கு தொடர்புடைய பிரதான அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்குதல்.
- கருத்திட்ட ஆதரவாளர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களை வழிநடத்த கருத்திட்ட சமர்ப்பிப்பு வடிவத்தின் 14 இற்கு அமைவாக இடர் அபாயக் குறைப்பு (DRR) கையேட்டை தயாரிப்பதில் வழிகாட்டுதல் மற்றும் உதவி வழங்குதல்.

- இடர் முகாமைத்துவப் பிரிவிற்கான (Disaster management sector) மீட்புத் திட்டத்தைத் (Recovery plan) தயாரித்து, குறிப்பாக COVID கொவிட் பாதிப்புக்கள் மற்றும் நாட்டின் இறுக்கமான நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு 10 ஆண்டு அபிவிருத்தித் திட்டம் - 2030 இன் வரைவு தயாரிக்கப்பட்டது.
- இடர் அபாய முகாமைத்துவம் தொடர்பான நிறுவனப் பாத்திரங்களின் அடிப்படையில் சமூகத்திற்கு சேவைகளை வழங்குவதற்கான வரைவை தயாரிப்பதற்கான ஆதரவை வழங்குதல்.

## 2.3. நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து, போக்குவரத்து, மின்வலு மற்றும் எரிசக்தி, நீர் வள மற்றும் கழிவகற்றல் வசதிகள்

### நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து, போக்குவரத்து நீர் வள மற்றும் கழிவகற்றல் வசதிகள்

2022 ஆம் ஆண்டுக்கான பொருளாதார, சமூக மற்றும் அரசியல் மாற்றங்களை கருத்திற் கொண்டு, தற்போதுள்ள வரவு செலவுத் திட்டத்தைச் சார்ந்து, கருத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து, இந்தத் துறை தொடர்பான பணிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. அவற்றில், அதிவேக நெடுஞ்சாலைகளின் அபிவிருத்தி, ஏனைய நெடுஞ்சாலைகளின் பராமரிப்பு, விரிவாக்கம் மற்றும் மறுசீரமைப்பு, பாலங்கள் நிர்மாணம், நவீனமயமாக்கல் மூலம் பொது போக்குவரத்தை விருத்தி செய்தல், நகர்ப்புற-கிராமப்புற இணைப்பை விருத்தி செய்தல், போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல், வீதி விபத்துக்களைக் குறைத்தல், சுற்றாடலிற்கு ஏற்ற மின்சாரப் போக்குவரத்தை பிரபலப்படுத்துதல், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களின் அபிவிருத்தி, குடிநீர் விநியோகக் கருத்திட்டங்கள் மற்றும் கழிவகற்றல் கருத்திட்டங்களை செயற்படுத்துதல் என்பன பிரதான செயற்பாடுகளாக இனங்காணப்படலாம்.

### நிறைவேற்றப்பட்ட பணிகள்

- தொடர்புடைய பிரதான அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 43 புதிய கருத்திட்டங்கள் மற்றும் வேலைத் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.
- போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, துறைமுகம், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு, நீர் வழங்கல் அமைச்சு அல்லது இந்தத் துறைகளுடன் தொடர்புடைய ஏதாவது அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் கொள்கைப் பத்திரங்கள் பற்றிய அவதானிப்புக்களைத் தயாரித்தல். இவ்வாறான 69 அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
- கொள்கைகள் மற்றும் உத்திகளை தயாரிப்பில் குறித்த அமைச்சுக்களிற்கு தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்குதல்.
- பின்வரும் குழுக்களின் உறுப்பினராகச் செயற்படுதல்.
  - கழிவகற்றல் கொள்கையை விருத்தி செய்தல் மற்றும் 1974 ஆம் ஆண்டின் நீர்ச் சட்டம் இல . 2 இன் திருத்தம்.
  - தேசிய வாகன ஒழுங்குமுறைக்கான கொள்கைஉருவாக்குதல்.
  - பேருந்துக் கட்டணக் கொள்கையைத் தயாரிப்பது தொடர்பான விலைச் சூத்திரத்தைப் புதுப்பித்தல்.

- கருத் திட்ட வழிகாட்டல் குழுக்கள்.

- வெளிநாட்டு உதவி தொடர்பாக பணி குறிப்புக்கள் குறித்து கருத்துக்கள் வழங்குதல்.

## மின் வலு மற்றும் எரி சக்தி

இலங்கை வருடாந்தம் ஏறத்தாழ 12.8 மில்லியன் தொன் (ஒரு தொன் கனிய எண்ணெய் சார்பாக) சக்தி நுகரப்படுவதுடன் இறக்குமதி செய்யப்படும் இறக்குமதி செய்யப்படும் கனிய எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பொருட்கள் நாட்டின் தேசியப் பொருளாதாரத்திற்கு (43%) பங்களிக்கிறது. இதற்கு மேலதிகமாக, சுமார் 37% சக்தி உயிரியப் பொருண்மை இலிருந்தும், 11% நிலக்கரி, 6% நீர் மின்சாரம் மற்றும் அண்ணளவாக 3% புதிய புதுப்பிக்கத்தக்க சக்தியாலும் பயன்படுத்தப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டில், கனிய எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்களின் இறக்குமதிக்காக, ஆண்டுக்கு ரூ. 700,000 மில்லியன் செலவிடப்பட்டுள்ளன.

நாட்டின் தற்போதைய மொத்த மின் உற்பத்தி மற்றும் நிறுவப்பட்ட கொள்ளளவு முறையே 16,716 GWh மற்றும் 4,186 MW ஆகும். இலங்கையின் தனிநபர் மின்சார பாவனை 687 கிலோவாட் kWh ஆகும். மேலும் நாட்டின் வருடாந்த மின்சார தேவை 5.5% வீதத்தில் அதிகரித்து வருகின்றது. தேசிய கொள்கைக் கட்டமைப்பிற்கு அமைவாக, புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்து இருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பதுடன், அது மின்சார உற்பத்தி கலவையில் அதன் ஒருங்கிணைப்புக்கு விசேட கவனம் செலுத்துகிறது. அண்ணளவாக, நாட்டின் கனிய எண்ணெய் தேவையில் 30% மசகு எண்ணையாக இறக்குமதி செய்யப்படுகிறது மற்றும் மீதமுள்ளவை நேரடியாக சுத்திகரிக்கப்பட்ட பொருட்களாக இறக்குமதி செய்யப்படுகிறது . இதற்கு மேலதிகமாக, மின் உற்பத்தி மற்றும் தொழில்துறை பயன்பாடுகளின் தேவைகளுக்காக நிலக்கரி இறக்குமதி செய்யப்படுகிறது. 2021 ஆம் ஆண்டில், மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதிக்காக இலங்கை சுமார் 700,000 மில்லியன் ரூபாயை செலவிட்டுள்ளது.

மேலும், நாட்டின் தேசிய கொள்கைக் கட்டமைப்பிற்கு அமைவாக, மின்சார உற்பத்திக் கலவையுடன் ஏனைய சக்தித் தேவைகளுக்கு சுத்தமான சக்தியை சேர்ப்பதில் சிறப்பு அவதானம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அது நாட்டிற்கு மலிவான, குறைந்த விலை மற்றும் நம்பகமான உத்திகள் மூலம் நிறுவப்பட வேண்டும் என உணரப்பட்டுள்ளது

அதன் பிரகாரம், 2022 ஆம் ஆண்டில் மின்சாரம் மற்றும் எரிசக்தி துறையின் முன்னேற்றத்திற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பங்களிப்பு பின்வருமாறு.

- 10 அமைச்சரவைப் பத்திரங்கள் மீது அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன. இவ் அமைச்சரவைப் பத்திரங்களில் தேசிய சக்தி சாத்தியக் கூறு, அடுத்த பத்தாண்டுக்கான தேசிய சக்தித் திறன், உத்திகள் மற்றும் சாலை வரைபடம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வள மேம்பாட்டுத் திட்டம் 2021-2026 மற்றும் "கார்பன் கடன் வசதி" ஆகியவை சிறப்புப் பங்களிப்பை வழங்கியுள்ளன.

- நாட்டின் தற்போதைய கடினமான பொது நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு, உலக வங்கியின் கீழ் உள்ள அபிவிருத்தித் திட்டங்களின் கடன் மறுசீரமைக்கப்பட்டு, நாட்டு மக்களுக்கு அத்தியாவசிய சக்தியான பெட்ரோலியம் மற்றும் வீட்டு எல்.பி எரிவாயு இறக்குமதிக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

- கோவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி காரணமாக மின்வலு துறைக்கான மீட்புத் திட்டம் மற்றும் பத்தாண்டு அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல்.

- புதுப்பிக்கத்தக்க மின் வலு மற்றும் எரி சக்தி, பசுமை ஐதரசன் போன்ற கருத்திட்ட முன்மொழிவுகளிற்கான அவதானிப்புக்கள் மற்றும் கருத்துக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- குறித்த நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி கூரைமீது நிறுவும் சூரிய சக்திக் கலங்கள் தொடர்பான சவால்களை பகுப்பாய்வு செய்தல்
- தேசிய திட்டமிடல் திணைக்களம் 14 கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பாய்வு செய்து அவதானிப்புக்களை வழங்கியுள்ளது.
- மின்வலு மற்றும் எரி சக்தி மீதான சவால்களை வெற்றி கொள்வதற்கு கருத்துருப் பத்திரங்கள் தயாரித்தல், அரசு கட்டிடங்களுக்கான சக்தித் திறன் கொள்கைகள் மற்றும் வேலைத் திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பான சுற்றறிக்கைகளை தயாரிப்பதில் பங்களிப்பு செய்தல்.
- வெளிநாட்டு உதவி தொடர்பாக பணி குறிப்புக்கள் குறித்து கருத்துக்கள் வழங்குதல்.

## 2.4. நகர அபிவிருத்தி மற்றும் வீடுகள்

### நகர அபிவிருத்தி மற்றும் வீட்டுப் பிரிவு

உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 80 சதவீதத்திற்கும் அதிகமானவை நகரங்களில் உருவாக்கப்படுகின்றன. உலகின் நகர்ப்புற மக்கள்தொகை 2000 இலிருந்து 2030 வரை இரட்டிப்பாகும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன், மேலும் 2 பில்லியன் மக்கள் நகர்ப்புறங்களை அடையவுள்ளனர். மேலும், அக் காலகட்டத்தில் "கட்டப்பட்ட நகர்ப்புற பகுதி" (பில்ட்-அப் நகர்ப்புற பகுதி) 1.2 மில்லியன் சதுர கிலோமீட்டர்களினால் அதிகரிக்கலாம்.

இலங்கையில் நகரமயமாக்கல் விகிதம் ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது. 2012 இல் மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பின்படி, இலங்கையின் நகர்ப்புற மக்கள் தொகை நாட்டின் மொத்த சனத்தொகையில் 18.3% ஆகும். எனினும், வேறு சில ஆய்வுகள் நாட்டின் உண்மையான நகரமயமாக்கல் விகிதம் 34% முதல் 50% வரை காணப்படலாம் என மதிப்பிடுகின்றன. நாட்டில் வீட்டுவசதித் துறையைக் கருதினால், 2012 இல் நடத்தப்பட்ட மக்கள் தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பின்படி, மொத்தக் குடும்பங்களில் சுமார் 18.3% நிரந்தர வீடுகளில் வசிக்கவில்லை என அறியப்பட்டுள்ளது. அது மாத்திரமன்றி, வரிசை அறைகள் மற்றும் குடிசை வீடுகளின் எண்ணிக்கை, நாட்டின் மொத்த வீடுகளின் எண்ணிக்கையில் அண்ணளவாக 4.3% என கணக்கிடப்பட்டுள்ளது.

இச் சூழலில், நகர்ப்புற வசதிகளுக்கான அணுகலை விருத்தி செய்தல், பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்குப் போதுமான வீடுகளை வழங்குவதும் அபிவிருத்திக்கு மிக முக்கியமானதாகும். அதன் பிரகாரம், பல்வேறு அபிவிருத்திக் கருத்திட்டங்களையும் வேலைத்திட்டங்களையும் செயற்படுத்தல் மற்றும் கொள்கைப் பிழைகளைத் தவிர்த்து, துறையின் வளர்ச்சித் தேவைகளைப் பூர்த்தி செய்வது அவசியமாகும். பிரதானமாக கொள்கை வகுத்தலுக்கு உதவுதல், கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பாய்வு செய்தல், பல்வேறு வழிகளில் கருத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்குதலினூடாக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நகர்ப்புற அபிவிருத்தி மற்றும் வீடமைப்புப் பிரிவானது பங்களிப்பை வழங்கியுள்ளது.

### செயற்பாடுகள்

- 31 அமைச்சரவைப் பத்திரங்கள் / அமைச்சரவைக் குறிப்புக்கள் மீது அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.

- 23 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிதியுதவிக்கான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.
- நிகழ்கால கருத்திட்டங்களில் மாற்றங்களை பரிந்துரைத்தல்.
- கருத்திட்ட வழிநடத்தல் குழு / முன்னேற்ற மதிப்பாய்வு கூட்டங்களில் பங்கேற்றல்.
- கருத் திட்டங்கள் / துறை அபிவிருத்தி தொடர்பான அறிக்கைகளைத் தயாரித்தல்.
- தேசிய மற்றும் துறைசார் கொள்கை ஆவணங்களை தயாரிப்பதில் பங்கேற்றமை.
- நகர்ப்புற அபிவிருத்தி,வீடமைப்பு அமைச்சு மற்றும் குறித்த இராஜாங்க அமைச்சுக்களின் செயற் திட்டங்களை மதிப்பாய்வு செய்தல்.
- துறைசார் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக பிரதான அமைச்சு, இராஜாங்க அமைச்சு மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல்.

## 2.5. சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவம், கல்வி, உயர் கல்வி மற்றும் திறன் அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மற்றும் சமூக பாதுகாப்பு

### சுகாதாரப் பிரிவு

கொவிட்-19 வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தல் மற்றும் அதன் சமூகப் பரவலைத் தடுப்பதுடன், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மருந்துகள் மற்றும் சுகாதார உபகரணங்களின் பற்றாக்குறையைத் தடுப்பதுடன், நாட்டின் சுகாதாரச் சேவையை மேலும் திறம்பட நடத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல் இவ்வாண்டில் அரசாங்கத்தின் முதன்மை நோக்காக காணப்பட்டது. தேசிய திட்டமிடல் திணைக்களம், தொடர்புடைய திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களுடன் இணைந்து, நன்கொடைகள் வழங்கும் முகவர்களினூடாக தேவையான நிதி உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்தது. அதன் பிரகாரம், இந்திய கடன் வேலைத்திட்டம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய சுகாதார உதவி வழங்குநர்களுடன் இணைந்து இலங்கைக்கு அத்தியாவசிய மருந்துகள், அறுவை சிகிச்சை உபகரணங்கள் மற்றும் ஆய்வு கூட உபகரணங்களை இந்நாட்டிற்குப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தது. குறிப்பாக, சுகாதாரத் துறை தொடர்பான கருத்திட்டங்களில் பயன்படுத்தப்படாத நிதி, அத்தியாவசிய மருந்துகள், அறுவை சிகிச்சை உபகரணங்கள் மற்றும் ஆய்வு கூட உபகாரணப் பொருட்களை வாங்குவதற்கும் பயன்படுத்தப்பட்டது. அத்துடன், தற்போது சுகாதாரத் துறை தொடர்பான வெளிநாட்டு உதவிகளால் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களின் பொருளாதாரப் பின்னடைவால் ஏற்படும் பாதிப்பை நிர்வகிப்பதற்கும், அவற்றை மேலும் வினைத்திறனாக்குவதற்கும் தேவையான கொள்கை மற்றும் ஏனைய முகாமைத்துவ ரீதியில் தீர்மானமெடுப்பதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்பட்டன. அதன் பிரகாரம், ஒட்டுமொத்தமாக அரசாங்கத்தினால் 2022 ஆம் ஆண்டுக்காக சுகாதாரத் துறையின் மூலதனச் செலவுக்காக 31,097 மில்லியன் ரூபாவை ஒதுக்கியதுடன், அந் நிதியானது பிரதான அமைச்சு மற்றும் நிதி ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்புடன் குறித்த மாகாண சபைகளின் கீழ் இயங்கும் நிறுவனங்களைப் பராமரிக்கவும், கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் பயன்படுத்தப்பட்டது.

### செயற்பாடுகள்

- 16 கருத் திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பான அவதானிப்புக்கள்

தொடர்புடைய பிரதான அமைச்சு, தேசிய வரவு செலவுத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் என்பவற்றிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

- சுகாதார அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 07 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- சுகாதாரத் துறை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட 03 கொள்கை முன்மொழிவுகளுக்கு நிதி அமைச்சின் சார்பாக அவதானிப்புக்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.
- சுகாதாரத் துறைக்காக எதிர்வரும் ஆண்டுகளில் செயற்படுத்துவதை நோக்காகக் கொண்டு முன்மொழியப்பட்ட கருத்திட்டங்களை கருத்திற் கொண்டு கருத்திட்ட வரிசையை புதுப்பித்தல்.
- சுகாதாரத் துறை தொடர்பாக செயற்படுகின்ற வெளிநாட்டு உதவிகள் வழங்கப்படுகின்ற கருத்திட்டங்கள் தொடர்பான கூட்டங்களை நிகழ்த்தி உலக சுகாதார நிறுவனம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிதி உதவி நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் தொடர்புடைய அவதானிப்புகள்/விளக்கங்களை வழங்குதல்.

## கல்விப் பிரிவு

நாட்டின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கான முக்கிய கருவியாக மனித வள அபிவிருத்தி இனங்காணப்பட்டுள்ளது. அறிவு சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்குவதில் மனித மூலதனம் பெரும் பங்கு வகிக்கிறது. அதன் பிரகாரம், ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை உள்ளடக்கிய பொதுக் கல்வியானது குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளத்தை அமைப்பதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. முறையான கல்வியின் அடித்தளம் ஆரம்ப - இடை நிலைக் கல்வியுடன் ஆரம்பித்து (ஆரம்ப குழந்தை பருவ வளர்ச்சி / பாலர்) பாடசாலைக்கல்வி 13 ஆண்டுகள் நீடித்துக் காணப்படும். பாடசாலைக் கல்வியின் பல்வேறு பிரிவுகளின் கீழ் பிள்ளைகளின் அறிவு, திறன்கள் மற்றும் நடத்தைகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், ஆரம்பக் கல்வி தரம் 1 முதல் தரம் 5 வரையிலும், கனிஷ்ட இடைநிலைக் கல்வி தரம் 6 முதல் தரம் 9 வரையிலும், சிரேஷ்ட இடைநிலைக் கல்வி தரம் 10 முதல் தரம் 11 வரையிலும் சிரேஷ்ட உயர்நிலைக் கல்வி தரம் 12 முதல் தரம் 13 வரையிலும் காணப்படுகின்றன. பாடசாலைக் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்காக 10,155 அரசாங்கப் பாடசாலை அமைப்புக்களிற்கு மேலதிகமாக, அரச அங்கீகாரமுடைய 90 தனியார் பாடசாலைகள், 816 பிரிவெனாக் கல்வி நிறுவனங்கள் மற்றும் 30 விஷேட தேவையுடைய குழந்தைகளுக்கான விஷேட கல்விப் பாடசாலைகள் தீவு முழுவதும் பரவிக் காணப்படுகின்றன. நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டுள்ள 11,091 பாடசாலைகளில் சுமார் 4.3 மில்லியன் மாணவர்கள் கல்வி கற்பதுடன் சுமார் 270,000 ஆசிரியர்கள் பல்வேறு பிரிவுகளின் கீழ் கல்வியை வழங்குகின்றனர்.

வருடத்திற்கு சுமார் 320,000 மாணவர்கள் தரம் 01 இல் அனுமதிக்கப்படுவதுடன் ஆரம்பக் கல்வியின் இறுதியில் சுமார் 2% பாடசாலையை விட்டு விலகிச் செல்வதுடன் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தொற்றுவோர் 98% ஆனார் ஆகும். இவற்றினுள் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து 23 சதவீதமான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி அரச பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கின்றனர். எனவே, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்களின் திறன்களை விருத்தி செய்து, தொழில் வாய்ப்புச் சந்தையில் சந்தர்ப்பம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு, தொழிற்பயிற்சி மற்றும் திறன் துறையும், முறைசாரா கல்வித் துறையும் பல்வேறு பாடநெறிகளை நிகழ்த்துகின்றன.

உயர்கல்வி துறையில் முதலீடு செய்வதன் மூலம் நாட்டின் மனித வளத்தை அபிவிருத்தி செய்யலாம் என்பதால், புதிய பல்கலைக்கழகங்களை நிறுவுதல் மற்றும் புதிய பீடங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் பல்கலைக்கழகங்களுக்கான அனுமதியை அதிகரிப்பது அரசின் நோக்கமாகும். அதற்காக, 17 அரச பல்கலைக்கழகங்கள், 23 அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்கள் தீவு முழுவதும் நிறுவப்பட்டுள்ளன. மாவட்ட ஒதுக்கீட்டு முறையின் அடிப்படையில் வணிகம், உயிரியல், பௌதீகவியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகளிற்காகவும், பூரணமான தகுதியின் அடிப்படையில் கலைப் பிரிவுக்கும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், 2021ஆம் ஆண்டில் சுமார் 44,000 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளனர். விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகளின் கீழ் அதிக எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் தொழில் சந்தைக்கு ஏற்ற பட்டதாரிகளை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். மேலும், அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களில் இணைவதற்குத் தேவையான நிதி உதவி மானிய வட்டி விகிதத்தில் வழங்கப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டில் சுமார் 4,660 மாணவர்கள் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் பலன் பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல்கலைக்கழகக் கல்விக்கு மேலதிகமாக, நாடு முழுவதும் காணப்படுகின்ற 19 கல்வியியற் கல்லூரிகளில் 4,500 ஆசிரியர் மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

## பிரதான வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள்

## பொதுக் கல்வித் துறை

- பாடசாலை மாணவர்களின் போசாக்குத் தேவையை விருத்தி செய்யவும், பாடசாலை வரவை விருத்தி செய்யவும் பாடசாலை மதிய உணவு வேலைத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது.
- உலக வங்கி உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் கல்வி நவீனமயமாக்கல் வேலைத்திட்டம்.
- மேல்நிலைப் பாடசாலைகளின் வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் 1,000 தேசியப் பாடசாலைகளை நிறுவுதல்.
- தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்திக் கருத்திட்டம்.
- ஆரம்பப் பாடசாலைகளில் வசதிகளை விருத்தி செய்வதற்கான கருத்திட்டம்.
- தோட்டப் பகுதி பாடசாலைகளை தரம் உயர்த்தும் வேலைத்திட்டம்.
- பாடசாலை மாணவர்களுக்கான பல்வேறு நலன்புரி வேலைத்திட்டங்கள்.

## உயர் கல்வித் துறை

- பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்ப பீடங்களை நிறுவுதல்.
- சப்ரகமுவ மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகங்களில் புதிய மருத்துவ பீடங்களை நிறுவுதல்.
- ருஹுணு பல்கலைக்கழகத்தில் இணை சுகாதார பீடத்தை நிறுவுதல்.
- உயர் கல்வி துரிதப்படுத்தல் மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டம்.
- வயம்ப பல்கலைக்கழக நகர அபிவிருத்திக் கருத்திட்டம்.
- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்திக் கருத் திட்டம்.

**2022.12.31 இல் முன்னேற்றம்**

| விபரம் | பெறப்பட்ட எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| கருத்திட்ட முன்மொழிவுகள் | 17 | 17 |
| அமைச்சரவைப் பத்திரங்கள் | 24 | 24 |

## திறன் விருத்திக் கல்வி

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களில் இளைஞர், யுவதிகள் தொழிற் துறையில் ஈடுபடுவதற்கும் திறன் இடைவெளியை நிரப்புவதற்கான திறன்களைப் பெறுவதற்கும் ஒரு சிறந்த தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சித் (TVET) தொகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும். அதன் பிரகாரம், நாட்டில் தேசிய, பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி செயற்பாடுகளில் உயர் திறன்கள் மற்றும் திறமையான பணியாளர்களைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. அதே நேரத்தில், வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவிப்பது, ஏற்றுமதி சார்ந்த தொழில்களை ஆதரிப்பது மற்றும் பசுமைப் பொருளாதாரமாக நாட்டை மாற்றுவதை எளிதாக்கும் நோக்கத்துடன் இளைஞர்கள் மற்றும் வயது வந்தோருக்கு தொழில்-தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் திறன்களை விருத்தி செய்வதற்கும் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

## பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாடுகள்

- முறையான நியாயப்படுத்தப்பட்ட 09 மதிப்பீட்டு அறிக்கைகள் தேசிய வரவு செலவுத் திணைக்களம்/வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தொடர்புடைய பிரதான நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தல்.
- திறன் கல்வித் துறை தொடர்பான 07 அமைச்சரவைப் பத்திரங்களிற்குறிய அவதானிப்புக்களைத் தயாரித்து வழங்கியமை.
- திறன் அபிவிருத்தித் துறையுடன் தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் அரசு நிறுவனங்களுடன் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்.
- பல்வேறு தரப்பினரால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு அறிக்கைகள்/ஆவணங்கள்/திட்டங்களுக்கான கருத்துகள்/அவதானிப்புகளைத் தயாரித்தல்.

## தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

இருபத்தியோராம் நூற்றாண்டு அறிவை மையமாகக் கொண்ட நூற்றாண்டு என்று அழைக்கப்படுகிறது. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய அரசாங்கக் கொள்கையானது தொழில்நுட்ப அடிப்படையிலான சமூகத்தை உருவாக்குவதுடன், இது உலகளாவிய கண்டுபிடிப்பு மையமாக, மக்களை மையமாகக் கொண்ட டிஜிட்டல் இராஜதந்திரத்தை உருவாக்குதல், டிஜிட்டல் மயமாக்கப்பட்ட இலங்கை, தகவல் தொழிநுட்பம் சார்ந்த தொழில்முனைவோரை உருவாக்குவதினூடாக கட்டியெழுப்புவது எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு புதிய தொழில்நுட்பங்களிற்காக மூலோபாயவிதத்தில் முதலீடு செய்தல் மற்றும் நமது கல்வி முறை மற்றும் பொருளாதாரத்தில் அத்தகைய கண்டுபிடிப்புகளை ஒருங்கிணைத்தல் என்பன காலத்தின் தேவையாகும். "தேசிய டிஜிட்டல் மாற்றம் நிகழ்ச்சி நிரல்" தொழில்நுட்பம் மற்றும் அபிவிருத்தித் துறையின் இலக்குகளை அடைவதில் முக்கியப் பங்கு வகிக்க பங்குதாரர்களுக்கு உகந்த சூழலை உருவாக்கப்படுகிறது. புதிய தொழில்நுட்ப வியாபாரங்களை ஆரம்பிப்பதற்காக தொழில்முனைவோரிற்கு உகந்த சூழலை உருவாக்குவதன் மூலம் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கவும் துரித வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்காகவும் உலகில் வளர்ந்து வரும் துறையாக தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத் துறையை மேம்படுத்துவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில், நாட்டின் டிஜிட்டல் வளர்ச்சிக்கு உந்துதலாக அமையும் பிரதானமான குறுகிய மற்றும் நடுத்தர கால முயற்சியை எடுத்துக்காட்டும் உலக வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால், "மீட்சி,

வளர்ச்சிக்கான டிஜிட்டல் உள்ளடக்கம் மற்றும் மாற்றம்" இற்கான கொள்கை அறிக்கையை தயாரிக்கப்பட்டது.

### பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாடுகள்

- 04 அமைச்சரவைப் பத்திரங்களிற்குறிய அவதானிப்புக்களைத் தயாரித்து வழங்கியமை.
- தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுடன் பல்வேறு கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்.

## சமூகப் பாதுகாப்புப் பிரிவு

சமூகத்தில் உள்ள வரப்பிரசாதங்கள் அற்ற அத்தியாவசியமான அனைத்து சமூகப் பிரிவினரிற்காகவும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்வதுடன், அதிகாரமளிப்பதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி அணுகுமுறைக்காக எதிர்பார்க்கப்பட்ட பல சமூகப் பாதுகாப்பு முன்மொழிவுகளை அரசாங்கம் செயற்படுத்துகிறது. சமுர்தி, வீட்டுப் பொருளாதாரம், நுண்நிதி, சுயவேலைவாய்ப்பு மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மற்றும் மகளிர், சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலைகள் மற்றும் ஆரம்ப நிலைக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவை இராஜாங்க அமைச்சு பின்னர் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு சிறுவர்கள், பின்தங்கிய பெண்கள், முதியவர்கள் மற்றும் ஊனமுற்றோர் உட்பட பாதிக்கப்படக்கூடிய பிரிவினரின் நல்வாழ்வை உறுதிப்படுத்தும் முக்கிய அமைச்சாகும். இதன் பிரகாரம், இக் குழுவினரின் வாழ்க்கை தரத்தை விருத்தி செய்வதற்கு மற்றும் அவர்களை சமூகத்தின் பிரதான நீரோட்டத்திற்குக் கொண்டுவருவதற்கும் தேசிய திட்டமிடல் திணைக்களமானது, பிரதான அமைச்சுடன் இணைந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது

### 2022.12.31 இல் முன்னேற்றம்

- கருத் திட்ட முன்மொழிவுகளுக்கான மதிப்பீட்டு அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புகள் தயாரித்தல்.

| | பெறப்பட்ட எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| கருத்திட்ட முன்மொழிவுகள் | - | - |
| அமைச்சரவைப் பத்திரங்களிற்கான அவதானிப்புக்கள் | 01 | 01 |
| அமைச்சரவைப் பத்திரங்களிற்கான கருத்துக்கள் | 07 | 07 |

- பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல் - தேசிய சமூகப் பாதுகாப்பு மூலோபாயம், சமூகப் பாதுகாப்பு நிகரத் திட்டத்தின் (SSNP) மறுசீரமைப்பு மற்றும் ஆரம்பக் குழந்தைப் பருவ மேம்பாட்டுத் திட்டத்தின் (ECD) மறுபரிசீலனைக்கான பரிந்துரைகள் செய்யப்பட்டன.

- கொள்கை மதிப்பாய்வு மற்றும் மதிப்பீடு - பின்வரும் கொள்கைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டன.
  - இலங்கையில் குழந்தைகள் பகல்நேர பராமரிப்பு வசதிகள் பற்றிய தேசிய கொள்கை.
  - கல்விக் கொள்கை.
  - தேசிய சமூக பாதுகாப்பு குறித்த கொள்கை கட்டமைப்பு.

- பின்வரும் அறிக்கைகள் மீதான கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
  - பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு தொடர்பான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் வரைவு.
  - பாலின சமத்துவம் மற்றும் சமூகமயமாக்கல் அறிவை உருவாக்குதல்.
  - 2023, UPRன் 4வது சுழற்சி.
  - குழந்தைகள் பாதுகாப்பிற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டம்.
- கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளில் தேசிய திட்டமிடல் திணைக்களம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது
  - சமூகப் பாதுகாப்புத் துறையின் தொடர்புடைய பிரதான நிறுவனங்களால் நிகழ்த்தப்படும் முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டங்களில் பங்கேற்று, சமூகப் பாதுகாப்பு செயல்திறனை மேம்படுத்த தேவையான உள்ளீடுகளை வழங்கியது.

## 2.6. பொது நிர்வாகம், நல்லாட்சி, கலாச்சாரமும் மத விவகாரங்களும், பேரண்டப் பொருளாதார அபிவிருத்தி

### நல்லாட்சிப் பிரிவு

2022 ஆம் ஆண்டில், நல்லாட்சிப் பிரிவினால் திறமையான பொதுச் சேவையையும் சட்டத்தை அமுல்படுத்தும் பாதுகாப்பான சூழலையும் உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் தேசிய பொருளாதாரக் கொள்கையால் வெளிப்படுத்தப்பட்ட நோக்கங்கள் மற்றும் உத்திகளின் அடிப்படையில் முக்கியப் பங்காற்றியுள்ளது.

மேலும், அமைச்சரவைப் பத்திரங்களிற்காக அவதானிப்புக்களை வழங்குவதிலும், நடுத்தர கால வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதிலும், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடையும் நோக்கத்துடன் இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், நவீன தொழில்நுட்பரீதியில் பொதுமக்கள் நட்பைப் பேணி பொதுச் சேவையை கட்டியெழுப்புதல், ஜனநாயக சுதந்திரத்தை பாதுகாத்தல், நட்புரீதியான அணிசேரா வெளியுறவுக் கொள்கையை செயற்படுத்தல், ஊழல் மற்றும் மோசடிகள் அற்ற நாட்டை உருவாக்குதல், பொதுச் சேவையில் பொறுப்புக்கூறலை நிறுவுதலை நோக்காகக் கொண்டு பின்வரும் அமைச்சுக்கள் மற்றும் பிற கட்டமைப்புகள் தொடர்பான துறைகளில் திட்டமிடல் செயன்முறைக்கான பங்களிப்பை வழங்குகின்றன.

- பொது நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சி
- பொது மக்கள் பாதுகாப்பு
- தேசிய பாதுகாப்பு
- வெகுசன ஊடகம்
- நீதித்துறை
- வெளிநாட்டு அலுவல்கள்
- மத, கலாச்சார நடவடிக்கைகள் மற்றும் தேசிய பாரம்பரியம்
- சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் சிறப்பு செலவின அலகுகள்

அதன் பிரகாரம், திறமையான மற்றும் பயனுள்ள பொது நிர்வாகத்திற்காக 2022 ஆம் ஆண்டில்,

- பொது நிதி அல்லது வெளிநாட்டு நிதி மூலம் நிதியுதவி செய்வதற்கான 74 கருத்திட்ட முன்மொழிவுகளின் மதிப்பீடு.
- பல்வேறு அமைச்சுக்களின் கீழ் வழங்கப்பட்ட 40 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புகள் மற்றும் கருத்துக்களை வழங்குதல்.

- பிரிவின் விடயத்தின் கீழ் காணப்படுகின்ற கலந்துரையாடல்கள் மற்றும் வழிநடத்தல் குழுவின் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் மற்றும் கருத் திட்டங்கள் தொடர்பான மேலதிக கூட்டங்களில் பங்கேற்றல்.

- பொருளாதார அபிவிருத்திக்கு உகந்த சூழலை ஏற்படுத்தல், வினைத்திறனான பொதுச் சேவையை உறுதி செய்வதற்காக நல்லாட்சியின் கீழ் பொது நிறுவனங்களை வழிநடத்த அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட குழு உட்பட 09 கருத்திட்ட செயற்பாட்டு குழுக்கள் மற்றும் 02 கொள்கை உருவாக்கம் மற்றும் மீளாய்வுக் குழுக்களுக்கான கூட்டங்களில் திணைக்களம்/அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்துமுகமாக பங்கேற்றமை.

## பேரண்டப் பொருளாதாரத் துறை

பேரண்டப் பொருளாதாரத் துறை எமது திணைக்களத்தினுள் காணப்படுகின்ற ஏனைய அனைத்து அபிவிருத்தித் துறைகளையும் ஒரே கொள்கைக் கட்டமைப்பினூடாக ஒருங்கிணைத்து நாட்டின் பொதுவான அபிவிருத்தி இலக்கை நோக்கி செயற்படுத்தும் துறையாகும். இதன் பிரகாரம், பேரண்டப் பொருளாதாரத் துறையில் கொள்ளளவு அபிவிருத்திக்காக 2022 ஆம் ஆண்டில் அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன், இது தொடர்பாக உலக வங்கியின் பிரதிநிதிகளுடன் பல கலந்துரையாடல்களும் நிகழ்த்தப்பட்டன. மேலும், பிரதமரின் அனுசரணையுடன், தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வையின் கீழ் "தேசிய கொள்கை ஆலோசனைக் குழு" நிறுவப்பட்டது. இக் குழுவானது எங்கள் பணிப்பாளர் நாயகம் உட்பட, ஐபிஎஸ் நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் மற்றும் பிரதமர் அலுவலகத்தின் பொருளாதார ஆலோசகர் ஆகியோரை உள்ளடக்கி, முறையான தேசிய கொள்கை கட்டமைப்பை உருவாக்குவது இதன் முக்கிய நோக்கம் ஆகும்.

அதன் பிரகாரம், தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து பேரண்டப் பொருளாதாரப் பிரிவு 2022 ஆம் ஆண்டிற்கான பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டது:

- உருவாக்கப்பட்ட “தேசிய பொருளாதார ஆலோசனைக் குழு” மூலம் தேசிய அபிவிருத்திக் கொள்கைக் கட்டமைப்பு வரைவு செய்யப்பட்டதுடன் அதன் “முதற்கட்ட அறிக்கை” பிரதமரின் வழிகாட்டுதலின் பிரகாரம் “பொருளாதார ஸ்திரப்படுத்தல் குழுவிடம்” சமர்ப்பிக்கப்பட்டது.

- ஒரு அமைச்சரவைப் பத்திரத்திற்காக 2022 ஆம் ஆண்டில் இப்பிரிவினால் அவதானிப்புக்கள் வழங்கப்பட்டதுடன் கருத்திட்ட முகாமைத்துவ திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்டமொன்றை மதிப்பீடு செய்த பின்னர் அவதானிப்புக்களை வழங்குதல்.

- இந்தத் துறையுடன் தொடர்புடைய 15 உலக வங்கி வெளிநாட்டுப் பணிகள், 01 பிரெஞ்சு பயணங்கள் மற்றும் 02 ஆசிய வளர்ச்சி வங்கிப் பணிகளுக்கு 2022 ஆம் ஆண்டில் எமது திணைக்களத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டமை.

- ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாக உதவிகளைப் பெறுவதற்காகத் தொடர் கருத் திட்டங்களுக்காக எமது திணைக்களத்தின் தொடர்புடைய பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பொருத்தமான செயற்திட்டங்களை வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்.

- தற்போது தயாரிக்கப்பட்டு வரும் பொது நிதி முகாமைத்துவச் சட்டத்திற்கான பேரண்டப் பொருளாதார முன்மொழிவுகளுக்கு ஏற்ப பரிந்துரைகளை வழங்குதல்.

## 2.7. தொழிலாளர் நடவடிக்கைகள்

### தொழிலாளர் பிரிவு

### தொழிலாளர் உற்பத்தித்திறனை அதிகரித்தல்

பொருளொன்றை அல்லது சேவையொன்றை சந்தைக்குக் கொண்டுவருவதற்கு தனிநபரொருவரால் உடல் ரீதியில் மற்றும் மன ரீதியில் மேற்கொள்ளும் முயற்சி அல்லது உழைப்பு உற்பத்தியில் மிக முக்கியமான காரணியாகும். உழைப்பைக் கருத்தில் கொள்ளும்போது, தனிநபரின் திறன் நிலை, கல்வி மற்றும் உற்பத்தித்திறனில் ஆர்வம் ஆகியவை நம்பமுடியாத முக்கியமான காரணிகளாகும். அதன் பிரகாரம் தற்போதைய கொள்கைக் கட்டமைப்பினூடாக "ஒரு திறனான குடிமகன் ஒரு வளமான மனித வளம்" என்ற கொள்கையில் திறன்களைக் கொண்ட ஒரு பயனுள்ள பணியாளர்களை உருவாக்குவது பிரதானமான நோக்கமாகும். பொருளாதாரத்தில் துரித அபிவிருத்தியை அடைவதற்கும், உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கும், தொழில்நுட்பம், அறிவு, திறமைகளை மையமாகக் கொண்ட ஊழியப்படை நமது நாட்டில் நிறுவப்படவேண்டும். மேலும், நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து, துரித பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு தொழில் மற்றும் சேவைத் துறைகளில் பயிற்சி பெற்ற மற்றும் செயற்றிறன் உள்ள ஊழியர்களை பணியமர்த்துவது இன்றியமையாத காரணியாகும். மேலும் தொழில்நுட்பம், அறிவு மற்றும் திறன்கள் நிறைந்த தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு வேலைக்கு அனுப்புவதன் மூலம், தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிக்கு சாதகமான தீர்வைப் பெற முடியும். இதனூடாக அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு குறுகிய கால தீர்வு வழங்கப்படுவதுடன் நீண்டகால உயரிய அனுபவம் மற்றும் தொழில் முனைவுத் திறன்களைக் கொண்ட திறமையான பணியாளர்கள் நாட்டினுள் விருத்தியடையும். 2020 ஆம் ஆண்டில், வெளிநாட்டு சேவையாளர்கள் பணம் அனுப்பும் மதிப்பு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் சுமார் 7.1% ஐ விட அதிகமாக இருந்தது. ஆனால் தற்போது சேவைப் பணியாளர்கள் பணம் அனுப்புவதில் வீழ்ச்சி காணப்படுவதால், பணம் அனுப்பும் தொகையை அதிகரிக்கும் வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தொழிலாளர் பிரிவு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுடன் ஒத்துழைப்பை வழங்கி, கொள்கை உருவாக்கத்திற்கு பங்களிப்பை வழங்குதல், கருத்திட்ட மதிப்பீடு, அமைச்சரவை பத்திரங்களை கருத்தில் கொண்டு அவதானிப்புக்களை வழங்குதல் மற்றும் கொள்கை முன்மொழிவுகளின் மதிப்பீட்டிற்கு பங்களிப்பை வழங்குகிறது. அதன் பிரகாரம், 2022 ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

- கருத் திட்ட முன்மொழிவை மதிப்பீடு செய்து வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு பரிந்துரைகளை வழங்குதல்.
- தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 9 அமைச்சரவைப் பத்திரங்கள் மீதான அவதானிப்புகளை சமர்ப்பித்தல். அதனுள் வேலைவாய்ப்புக்கான இடம்பெயர்வு தொடர்பான இலங்கை தேசிய கொள்கை மற்றும் 2023-2026 காலப்பகுதிக்கான செயற்திட்டம் என்பனவையும் அடங்கும்.
- அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்புக்கான சுவிஸர்லாந்து முகவர்களின் ஆதரவுடன் நிதி அமைச்சு மற்றும் ILO இற்கு இடையேயான ஒப்பந்தத்தின் பேறாக, வெளிநாட்டு தொழிலாளர் புலம்பெயர்ந்தோருக்கான அவசரகால வெளியேற்ற பதிலளிப்புத் திட்டத்தை உருவாக்குவதற்கு ஆதரவாக அமைந்தது.

- தாம் பெற்ற தொழில் பயிற்சிக்கு பட்டத்திற்கு அல்லது அறிவுக்கு அமைவான வெளிநாட்டு வேலை வாய்ப்பைக் கண்டறிவதற்காக, தொழிற் பயிற்சி நிறுவனங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகங்கள் மற்றும் தூதரகங்களுடன் இணைந்து கணினி வலையமைப்பை உருவாக்க தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்குத் தேவையான ஆதரவை தேசிய திட்டமிடல் திணைக்களம் வழிநடத்தல் குழு மூலம் வழங்குகிறது.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பினூடாக செயற்படுத்தப்படும் ஊழியர்களின் உடல்நலப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் ஒழுக்கமான பணிச்சூழலை உருவாக்குவதற்கும் தேவையான ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.
- பேரிடர் சூழ்நிலைகளில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களை மீள் அழைப்பது தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் சட்டங்களை உருவாக்குவதற்கு வெளிவிவகார அமைச்சு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் நீதி அமைச்சுடன் இணைந்து தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.

## 2.8. இளைஞர், விளையாட்டு நடவடிக்கைகள், பிராந்திய அபிவிருத்தி

### இளைஞர் விவகாரப் பிரிவு

இளைஞர்களின் அபிலாஷைகளை சரியாக இனங்கண்டு நாட்டின் அபிவிருத்தி இலக்குகளுடன் அவற்றை இணைத்து அவர்களுக்கு அவ்விலக்குகளை அடைவதற்கு ஒரு குறிப்பிட்ட வேலைத்திட்டத்தின் கீழ் வழிநடத்துவதே பிரதான நோக்கமாகும். மேலும், பொருளாதாரத் துறையில் இளம் தொழில்முனைவோருக்கு அதிகபட்ச வாய்ப்புகளை வழங்குவதற்காக, தேவையான ஊக்குவிப்புக்களை செயற்படுத்தல் மற்றும், இளைஞர்களின் பங்களிப்பை நாட்டின் கல்வி, சமூக மற்றும் அரசியல் துறைகளில் உறுதிப்படுத்த தேவையான பின்னணியும் ஏற்படுத்தப்படுகிறது.

### விளையாட்டுப் பிரிவு

திறமையான, ஆரோக்கியமான மற்றும் ஒழுக்கமான மனித வளத்தை உருவாக்க சமூகத்தில் விளையாட்டு கலாச்சாரத்தை ஏற்படுத்துவது முக்கிய நோக்கமாகும். இதன் போது, பாடசாலை மட்டத்தில் இருந்தே பிள்ளைகளை விளையாட்டுத்திறனிற்கு அறிமுகம் செய்தல், விசேட விளையாட்டு திறன் கொண்ட பிள்ளைகளை இனங்கண்டு சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்லல், விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், விளையாட்டு பயிற்றுனர்களின் திறன் மேம்பாட்டிற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தல் என்பன எதிர்பார்க்கப்படுகிறது.

உலகளாவிய கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை மற்றும் நாட்டில் நிலவும் மோசமான பொருளாதார நிலை காரணமாக, பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் புதிய கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை நிறுத்துதல் போன்ற நடவடிக்கைகளால் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரப் பிரிவிற்கு 05 கருத்திட்ட முன்மொழிவுகள் மாத்திரமே பெறப்பட்டதுடன், அவை மதிப்பீடு செய்யப்பட்டு, தேவையான பரிந்துரைகள் தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்திற்கு மற்றும் தொடர்புடைய பிரதான அமைச்சுக்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், பிரதான அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட 06 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சரின் சார்பில் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

### பிராந்திய அபிவிருத்திப் பிரிவு

வறுமையைப் போக்குவதற்கும், நிலவும் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கும், பிரதேசத்தின் தனித்தன்மையை இனங்காண்பதினூடாக அனைத்து சமூக வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், இத்துறை தொடர்பான கொள்கை நடவடிக்கைகளுக்கு கொள்கை உள்ளீடுகள் வழங்கப்படுகின்றன. மேலும், துறைசார் மற்றும் இடைக்கால திட்டமிடல், கருத்திட்ட மதிப்பீடு, கருத்திட்ட சீரமைப்பு போன்றனவும் மேற்கொள்ளப்படுகின்றன.

பிராந்திய அபிவிருத்தியில், கிராமத்தை தனிமைப்படுத்தி அபிவிருத்திகளை மேற்கொள்ளாது, கிராமத்துடன் பிராந்தியத்தையும் இணைத்து வலயமாக அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கும் அவ்வாறு அபிவிருத்தியடைந்த வலயங்களை தலை நகருடன் இணைக்கபட வேண்டும் என தற்போதைய அபிவிருத்திக் கொள்கைகள் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், தேசிய மட்ட அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக, அந்தந்த மாகாணங்களில் உள்ள வளங்களை உகந்த மற்றும் நிலையான மட்டத்தில் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை இந்தப் பிரிவு வலியுறுத்துகிறது

அனைத்து மாகாண சபைகளுக்கும், நிதி ஆணைக்குழுவினால் நிகழ்த்தப்படுகின்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் இப்பிரிவினால் குறித்த உள்ளீடுகள்/ அவதானிப்புகளை வழங்கப்படுகின்றன.

## 2.9. பிராந்திய அபிவிருத்திப் பிரிவு

### 01. Promoting Autonomy, Literacy and Attentiveness through Market Alliances (PALAM/A) Project in Sri Lanka

இக் கருத்திட்டத்தின் கீழ் உதவியாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களுக்கான விஷேட வியாபார வரியை செலுத்துவதற்கு பதிலாக மற்றும் உணவுப் பொருட்களின் பெறுமதியைக் கணக்கிடுவதற்கும், 2022 வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பின்வருமாறு நிதி ஒதுக்கப்பட்டதுடன் அதற்கு மேலதிகமாக தேவையான நிதி பெறப்பட்டதுடன் 31.12.2022 அன்று செலவுகள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| செலவினத் தலைப்பு | 2022 வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் நிதி ஒதுக்கம் ரூ. | மேலதிகமாக பெறப்பட்ட நிதி ரூ. | மொத்த நிதி ஒதுக்கம் ரூ. | செலவு ரூ |
|---|---|---|---|---|
| 237-1-2-4-2506 (13) | 80,000,000.00 | 1,576,065,876.00 | 1,656,065,876.00 | 1,656,065,876.21 |
| 237-1-2-4-2506 (17) | 6,000,000.00 | 8,200,000.00 | 14,200,000.00 | 14,185,300.00 |

## 2.10. உலக உணவு வேலைத்திட்டம் (WFP)

உலக உணவுத் திட்டத்தின் ஒத்துழைப்பானது இலங்கையில் முறையாக 1968 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி ஒரு அடிப்படை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதன் மூலம் நிறுவப்பட்டதுடன் இலங்கை அரசாங்கம் அதன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு உறுதியளித்துள்ளது. உலக உணவுத் திட்டம் சில படிநிலைகளின் தலையீட்டினால் அவசர சந்தர்ப்ப தயார்நிலை மற்றும் பதிலளிப்பு, பாடசாலை உணவுத் திட்டங்கள், தாய்மார்களின் போசனைக் குறைபாட்டைத் தடுத்தல் மற்றும் நிர்வகித்தல், காலநிலை மாற்ற அபாயங்களிலிருந்து மீள்தல், வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப ஆதரவளித்தல் மற்றும் பின்னடைவைக் கட்டியெழுப்புதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பங்களிப்பை வழங்குகிறது. தற்போது, 2018 முதல் 2022 வரையிலான அரச மூலோபாயத் திட்டம் முக்கியமாக நிலையான அபிவிருத்தி இலக்குகளின் இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள பசியை ஒழிக்கும் நோக்கங்களுக்கு ஏற்ப செயல்படுத்தப்படுகிறது. பின்வரும் வெளியீடுகள் எதிர்பார்த்த முடிவுகளாகும்.

- இலங்கையில் வானிலை மற்றும் பிற நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆண்டு முழுவதும் உணவு வழங்கல்.
- உணவுப் பாதுகாப்பற்ற பகுதிகளில் உள்ள பாடசாலைகள் செல்லும் பிள்ளைகளிற்கு ஆண்டு முழுவதும் உணவு கிடைப்பதற்கான அனுமதி.
- இலங்கையில் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களின், பருவப் பெண்கள், குழந்தை பிறக்கும் வயதுடைய பெண்களின் போஷாக்கை 2025 ஆம் ஆண்டளவில் விருத்தி செய்தலாகும் இலங்கையில் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் மற்றும் சிறு-அளவிலான விவசாயிகளின் ஆண்டு முழுவதும் வாழ்வாதாரத்தை வலுப்படுத்துதல் மற்றும் அதிர்ச்சிகளை தாங்கும் திறனை விருத்தி செய்தல்.

மேற்கூறிய முடிவுகளை அடைந்து கொள்வதற்கு, 2018-2022 அரச மூலோபாயத் திட்டம், ஆண்டுத் திட்டங்களின் கீழ் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் செயற்படுத்தப்பட்டது. அதன்படி, 2022 ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

**1. இலங்கையில் நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆண்டு முழுவதும் உணவு கிடைப்பனவிற்கான உட்பிரவேசம்**

பொருளாதார, சமூக, சுற்றாடல், காலநிலை மற்றும் பிற அபாயங்களின் விளைவாக பெரும்பாலும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் உணவு மற்றும் போசாக்கு பாதுகாப்பின்மை ஆபத்துக்கள் காணப்படுவதுடன் போதியளவு பயிற்செய்கை திறனின்மையால் அந் நிலைமை மேலும் தீவிரமடைந்துள்ளது.

உலக உணவு வேலைத்திட்டத்தின் அவசரகால நிவாரணத் தலையீடுகள், இடர் நிலைமையின் போது மற்றும் சீரான நிலைமைக்கு கொண்டு வரும் ஆரம்பக் கட்டத்தின் போது, மேலே பாதிக்கப்படக் கூடிய சமூகங்களுக்கு உதவி வழங்குதலானது மதிப்பீட்டின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்படும். இவ் விளைவு நெருக்கடியான நிலைமைகளில் உணவுக்காக உட்பிரவேசித்தலை விருத்தி செய்வதை இலக்காகக் கொண்டு பாதிப்புக்குள்ளாகும் குழுவினர் குறிப்பாக குழந்தைகள், பெண்கள்,அவர்களது குடும்பத் தலைவர்கள், முதியவர்கள், ஊனமுற்றோர்,குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் என்போருக்கு போதுமான போசாக்குள்ள உணவை உட்கொள்வதை உறுதிசெய்கிறது. இவ் விளைவுகளின் பிரதானமாக

அவதானம் செலுத்தப்படுவது இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதை உறுதி செய்வதாகும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு போசனைத் தேவைகள் மற்றும் அடிப்படை உணவை வழங்குவதன் மூலம் உடனடி உணவுக்கான உட்பிரவேசத்தை வழங்குவது இதன் முக்கிய விளைவாகும். இதன் கீழ் பின்வரும் கருத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

i. மிகவும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள் எதிர்நோக்குகின்ற நிகழ்கால பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, உலக உணவு வேலைத்திட்டம் 14 மாவட்டங்களில் வாழ்வதற்கான இடரை எதிர்நோக்கியுள்ள குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கியுள்ளது. தகவல்களைப் பயன்படுத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களுக்கு பணமாகவோ அல்லது உணவாகவோ உதவிகள் வழங்கப்பட்டன. இதன்படி, அம்பாறை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், நுவரெலியா, மன்னார், மொனராகலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய 8 மாவட்டங்களில் ஆபத்தில் உள்ள குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. வெஸ்டர்ன் யூனியன் வங்கியினூடாக, Plug Pay கணக்குப் பரிமாற்ற முறையினூடாகவும் உலக உணவுத் திட்டம், நேரடியாக பயனாளிகளின் கணக்குகளுக்கு நிதியை மாற்றியது. தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பமொன்றிற்கு ரூ. 15,000 வழங்கப்பட்டதுடன் உலக உணவுத் திட்டத்தால் வெளியிடப்பட்ட மொத்தப் பெறுமதி ரூ. 1,217.03 மில்லியன் ரூபாவும் பயனடைந்த குடும்பங்களின் எண்ணிக்கை 81,135 உம் ஆகும். மேலும், உலக உணவு வேலைத்திட்டம் 12,950 குடும்பங்களுக்கு கார்கில்ஸ் ஊடாக உணவு வவுச்சர்களை விநியோகித்துள்ளதுடன் அதற்காக 194,253 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளது.

ii. சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் ரூ. 625,625,000 ஐ நிகழுகின்ற பொருளாதார நெருக்கடிக்கு எதிர்வினையையாக அம்பாறை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், நுவரெலியா, மன்னார், மொனராகலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் வாழும் மிகவும் பாதிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உணவு கூடை வாங்குவதற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ. 15,000 ஐ ஒதுக்கீடு செய்துள்ளது.

iii. 307,228 குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அவசர உணவு உதவியாக 22,888.8 மெட்ரிக் டன் உணவுப் பொருட்களை (15,360 மெட்ரிக் டன் அரிசி, 6,144 மெட்ரிக் டன் பருப்பு மற்றும் 1,384 மெட்ரிக் டன் மரக்கறி எண்ணெய்) வழங்க திட்டமிடப்பட்டது. 52,571 பயனாளிகளுக்கு 3,919.2 மெட்ரிக்தொன் உணவுப் பொருட்கள் டிசம்பர் 2022 இறுதிக்குள் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீட்டுக்கும் தலா 50 kg அரிசி, 20 kg பருப்பு, 4.5 kg மரக்கறி எண்ணெய் விநியோகிக்கப்பட்டது. உணவு ஆணையாளர் திணைக்களமானது மத்திய உணவுக் களஞ்சியசாலையிலிருந்து பல்வேறு கூட்டுறவுச்சேவை சங்கங்களுக்குச் சொந்தமான உணவுக் களஞ்சியசாலைகளிற்கு உணவுப் பொருட்களை விநியோகித்தது. 2022 ஆம் ஆண்டில் நன்கொடையாக கருத்திட்டத்திற்காக பெறப்பட்ட உணவின் பெறுமதி ரூ. 4,292.5 மில்லியன் ஆகும். ரூ. 15.6 மில்லியன் உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது. அனுமதி, போக்குவரத்து மற்றும் கையாளுதல் கட்டணங்களை செலுத்துவதற்கு ரூ. 103.24 மில்லியன் அரச நிதியிலிருந்து செலுத்தப்பட்டது.

iv. பாதுகாப்பு அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், பருவமழை பதிலளிப்பு ஒருங்கிணைப்பு மன்றத்தை நிகழ்த்தி அவர்களின் வருடாந்த திட்டம், இடர் குறைப்பிற்கு நிகராக நிவாரண திட்டமிடல், பதிலளிப்பு, சரியான நேரத்தில் தகவல் மற்றும் முகாமைத்துவம், உணவு பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான

தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்கியது. அதே நேரத்தில், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், வளிமண்டல ஆராயச்சித் திணைக்களம், தேசிய அனர்த்த நிவாரண மையம் மற்றும் பாதுகாப்பு அமைச்சகத்தின் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் என்பன அந்த நிறுவனங்களை வலுப்படுத்த தொழில்நுட்ப திறனை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை செயற்படுத்தியுள்ளன. மொத்த செலவு ரூ. 18.98 மில்லியன் ஆகும். அதற்கு மேலதிகமாக, உலக உணவுத் திட்டம் நேரடியாக வளிமண்டல ஆராயச்சித் திணைக்களத்திற்கு Linux-ox உடன் பல்நோக்கு சேவையகத்தை வழங்கியுள்ளதுடன் அதன் பெறுமதி ரூ.36.31 மில்லியன் ஆகும்.

v. உலக உணவுத் திட்டம் இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அபிவிருத்திக்கு ஆதரவளித்ததுடன் இதன் கீழ் இரத்தினபுரி மாவட்டத்தில் 03 அவசர செயற்பாட்டு அறைகள் நிறுவப்பட்டன. மொத்த முதலீடு ரூ. 4.56 மில்லியன் ஆகும்.

vi. சமுத்திரச் சூழல் பாதுகாப்பு அதிகாரசபைக்கு ரூ. 04 மில்லியன் வழங்கப்பட்டது எண்ணெய் மற்றும் இரசாயனக் கசிவுகளுக்குப் பதிலளிப்பதற்கும், தேசிய அளவில் எண்ணெய் மற்றும் இரசாயனக் கசிவுகளுக்கு பதிலளிப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரின் திறனை மேம்படுத்துவதற்குமாகும். செலவு ரூ. 3.85 மில்லியன் ஆகும்.

vii. உலக உணவுத் திட்டம் 02 மல்டி மீடியா புரொஜெக்டர்கள், 02 கணினிகள், 02 UPS ஆகியவற்றை இறுதித் திட்ட காலநிலை சேவைகள் கருத்திட்டத்தின் கீழ் தகவல் அமைப்பை வலுப்படுத்துவதற்காக விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வழங்கியது. மொத்த செலவு ரூ. 600,000.00 ஆகும்.

viii. அனர்த்த உணர்திறன் வேலைத் திட்டங்களின் அபிவிருத்தியின் கீழ், நவீன தொழில்நுட்பம் தொடர்பாக ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆதரவுடன் உலக உணவுத் திட்டத்தினால் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார், மாத்தளை மற்றும் மொனராகலை ஆகிய 05 மாவட்டங்களில் உள்ள 125 உத்தியோகத்தர்களுக்கு நேரடியாக GIS பயிற்சியை நிகழ்த்தியதுடன் குறித்த மாவட்டங்களின் குறித்த பிரதேச செயலகங்களிற்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. பயிற்சி மற்றும் கணினிகளுக்கான மொத்த முதலீடு ரூ. 19.61 மில்லியன் ஆகும். அதற்கு மேலதிகமாக, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட ரீதியிலான பயிற்சி நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டதுடன் அதற்கு ஏற்பட்ட மொத்த செலவு ரூ. 361,000.00 ஆகும்.

**2. உணவுப் பாதுகாப்பற்ற பகுதிகளில் உள்ள பாடசாலை வயது பிள்ளைகளிற்கு ஆண்டு முழுவதும் உணவிற்கான பிரவேசம்**

பாடசாலை உணவு வேலைத் திட்டம் ஒரு முக்கியமான தேசிய பாதுகாப்பு வலையமைப்பாக இருப்பதால்,அதிக உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் போசாக்கு குறைபாடு உள்ள பகுதிகளை இலக்கு வைத்து பாடசாலை வயது பிள்ளைகளிற்கு வருடம் பூராகவும் உணவு விநியோகத்தை உறுதி செய்வதற்காக உலக உணவுத் திட்டம் அரசாங்கங்கத்திற்கு ஆதரவளிக்கிறது. இது குறுகிய கால பசியை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், மாணவர்களின் பாடசாலை வருகையை அதிகரிப்பதற்கும், பாடசாலை வயது பிள்ளைகளின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போசனையை விருத்தி செய்வதற்கு தேசிய கொள்கைகள் மற்றும் உத்திகளுக்கு இணங்குவதுடன் சமூக ஒற்றுமை மற்றும் அமைதியை நிலைநிறுத்துவதற்கும் இணங்குகிறது. உலக உணவுத் திட்டம் உணவு உதவி மற்றும் தொழில்நுட்ப உதவி என்ற இரட்டை அணுகுமுறையைப் பயன்படுத்தி அதன் இலக்குகளை அடைகிறது. இந்த வகையான ஒருங்கிணைந்த அணுகுமுறை, கல்வி முதலீட்டின் மீதான வருமானத்தை அதிகரிக்கவும், நீண்ட

காலத்திற்கு வறுமையைக் குறைக்கவும் உதவும். (கல்வி அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப ஆதரவுடன் பின்வரும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன)

எதிர்பார்க்கப்பட்ட 2 முடிவுகள் அடையப்பட்டன. அவை பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து அவர்களின் அடிப்படை உணவு மற்றும் போசனைத் தேவைகளை சிறப்பாக பூர்த்தி செய்வதற்காக அவர்கள் பாடசாலை செல்லும் ஒவ்வொரு நாளும் போசனையான உணவு வேளை ஒன்றை வழங்குவது மற்றும் இலக்கு வைத்த பாடசாலை மாணவர்களின் அடிப்படை உணவு மற்றும் போசனைத் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய விதத்தில் விருத்தி செய்து பாடசாலை உணவு வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாகும். (கல்வி அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப உதவியுடன் பின்வரும் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன)

I. வீட்டு அடிப்படையில் பாடசாலை மதிய நேர உணவு வேலைத் திட்டம்

சிறுபோக விவசாயிகளிடமிருந்து உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்தல், பாடசாலை போசனைகளை ஒருங்கிணைத்தல், தேசிய பொருளாதார விருத்தியை மேம்படுத்துதலினூடான நேரான தாக்கங்களினூடாக, வறுமையின் தீய சுழற்சியை உடைப்பதனூடாக அடுத்த தலைமுறையின் போசனை மற்றும் கல்வியின் வெற்றியை நோக்கி நகரலாம். உள்நாட்டு கொள்வனவுகளினூடாக பாடசாலை உணவுக்கான கேள்வியை அதிகரிக்கலாம். உள்நாட்டு சிறுபோக விவசாயிகளிடமிருந்து உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்வதினூடாக பாடசாலை போசாக்கின் விளைவுகளை விருத்தி செய்யலாம். உள்நாட்டு விவசாய உற்பத்தி மற்றும் இணைக்கப்பட்ட பாடசாலை மதிய நேர உணவு வேலைத்திட்டம் ஆகியன சிறுபோக விவசாயிகளுக்கு முன்னறிவிப்பு வழங்கப்படுவதுடன் நிலையான உள்நாட்டு சந்தைகளை அணுக உதவுவதுடன் ஒருங்கிணைந்த செயன்முறை மூலம் அத்தகைய அணுகலின் நன்மைகள் அதிகரிக்கபடுகின்றன. உள்நாட்டு விவசாய உற்பத்தி மற்றும் இணைக்கப்பட்ட பாடசாலை மதிய உணவு வேலைத் திட்டம், சிறுபோக விவசாயிகளுக்கு கட்டமைக்கப்பட்ட மற்றும் முன்னறிவிப்பான சந்தையை உருவாக்குவதன் மூலம் சந்தை இணைப்புக்களில் அவர்களுக்குரிய அப்பயத்தை குறைக்கலாம். வீட்டு அடிப்படையில் பாடசாலை உணவு வேலைத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக அமைவது ஆரம்பப் பாடசாலை சிறுவர்களின் போசாக்கு மற்றும் கல்விப் பெறுபேறுகளை விருத்தி செய்வதற்காக பொருத்தமான சிறுபோக விவசாயிகளுடன் நிலையான ஒருங்கிணைப்பில் பாடசாலை உணவு வேலைத் திட்டத்தை விருத்தி செய்வதாகும். அதற்காக தனமல்வில மற்றும் வில்கமுவ கல்வி வலயங்களில் அமைந்துள்ள 10 பாடசாலைகளில் நிவாரண நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

அ. சிற்றுண்டிச்சாலைகளின் நிர்மாணம்

மாத்தளை மாவட்டத்தில் வில்கமுவ கல்வி வலயத்தில் 05 சிற்றுண்டிச்சாலைகளில் மேற்கூரைகள் நிர்மாணிக்கப்பட்டதுடன் மொனராகலை மாவட்டத்தில் தனமல்வில கல்வி வலயத்திலுள்ள 05 சிற்றுண்டிச்சாலைகளுக்கு உபகரணங்கள் வழங்குவதன் மூலம் 2021 இன் எஞ்சிய பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன. மொத்த முதலீடு ரூ. 9.93 மில்லியன்கள் ஆகும்.

ஆ. நிதி முகாமைத்துவம் மற்றும் கல்வி மதிப்பீடு தொடர்பான பயிற்சி

இக் கருத்திட்டம் அனுராதபுரம், மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் வவுனியா ஆகிய 04 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டதுடன், மாகாண விவசாய திணைக்களங்கள், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்களில் தெரிவுசெய்யப்பட்ட 250 அரச ஊழியர்களிற்கு நிதி முகாமைத்துவம் மற்றும் தேவை மதிப்பீடு தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, 2023 ஆம் ஆண்டில் கோழிப்பண்ணைகளை நிறுவுவதற்கு மற்றும் வீட்டு அடிப்படையிலான பாடசாலை மதிய நேர உணவு வேலைத்திட்டம் குறித்த

பயிற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்கல் என்பன கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினூடாக 04 மாவட்டங்களில் நிகழ்ந்தன. 2023 ஆம் ஆண்டில். கருத்திட்ட முகாமைத்துவ அலகு மற்றும் உலக உணவு வேலைதிட்டத்தால் அளிக்கப்பட்ட மொத்த முதலீடு ரூ. 3.99 மில்லியன்கள் ஆகும்.

II. சாப்பாட்டு வேளையொன்றின் செலவை சீராக்குவதற்கான பயிற்சி

கல்வி அமைச்சு, விவசாய அமைச்சு, சுகாதார அமைச்சு,தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுக்கு உணவின் கலோரி எண்ணிக்கை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது. செலவு ரூ. 247,658.00 ஆகும்.

III. பாடசாலை உணவு வேலைத்திட்டத்திற்காக டின் மீன் விநியோகம்

பாடசாலை உணவு வேலைத் திட்டத்தின் கீழ் களுத்துறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு 28.5 மெற்றிக் தொன் டின் மீன்கள் விநியோகிக்கப்பட்டன. பதிவு செய்யப்பட்ட மதிப்பு ரூ. 6.04 மில்லியன்கள் ஆகும். மேலும், களுத்துறை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு டின் மீன் விநியோகத்திற்கு உலக உணவு வேலைத் திட்டம் ஆதரவளித்துள்ளது.

IV. பாடசாலை உணவிற்காக அரிசி வழங்கும் வேலைத்திட்டம்

உலக உணவு வேலைத் திட்டம், பாடசாலை உணவு வேலைத் திட்டத்திற்காக 1,470.5 மெட்ரிக் மெட்ரிக் தொன் அரிசியை வழங்கியுள்ளது. 09 மாகாணங்களின் 25 மாவட்டங்களில் அமைந்துள்ள 7,685 பாடசாலைகளுக்கு அரிசி விநியோகிக்கப்பட்டதுடன், பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 1,053,042 ஆகும். (529,830 மாணவிகள், 523,212 மாணவர்கள்). கல்வி அமைச்சு உணவு விநியோகத்தை மேற்கொண்டது.

**3. இலங்கையில் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் மற்றும் சிறுபோக விவசாயிகளின் ஆண்டு முழுவதுமான வாழ்வாதாரம் மற்றும் பின்னடைவை தாங்கிக் கொள்ளும் திறனை வலுப்படுத்துதல்**

அரசாங்கத்தின் முன்னுரிமையாக அமைவது நெருக்கடியான சூழ்நிலைகளுக்குப் பதிலளிப்பதற்கு மேலதிகமாக, பாதிக்கப்படக்கூடிய குழுக்களிடையே பின்னடைவை தாங்கிக் கொள்ளும் திறனை விருத்தி செய்தல் மற்றும் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தலுடன் வலுப்படுத்தப்பட்ட தொகுதிகள் மற்றும் செயன்முறைகள் மூலம் அவர்களின் திறன்களை விருத்தி செய்தலாகும். இவ் விளைவினூடாக பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் மற்றும் தனிநபர்களிற்கு ஏற்படும் அதிர்ச்சிகளிற்கு முகங்கொடுப்பதற்காக வலுப்படுத்திவதினூடாக உணவுப் பாதுகாப்பு மற்றும் மோசனையை விருத்தி செய்தல் என்பன ஏற்படுத்தப்படுகின்றன. அதில் உணவு உதவி, வாழ்வாதார ஆதரவு மற்றும் அரசாங்க திறனை வலுப்படுத்துதல் என்பவற்றினூடாக சமூகங்களுக்கு நீடித்த தீர்வுகளை வழங்குகிறது. அரசாங்கத்தின் திறனை விருத்தி செய்வது கட்டமைப்பு மற்றும் சமூக-கலாச்சார ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்தல், பாலினம் சார்பற்ற -அறிவுள்ளபொது முதலீட்டுக் கொள்கைகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி /முன்முயற்சிகளில் இடர்-உணர்திறன் திட்டமிடலை ஒருங்கிணைத்தல் போன்ற செயல்முறைகள் மூலம் ஆகும். \பலப்படுத்தப்படலாம். அதிர்ச்சிகள் மற்றும் அழுத்தங்களின் போது மொத்த தாங்கிக் கொள்ளும் திறனை அதிகரிப்பதற்கு இடர் குறைப்பு முயற்சிகளை ஆதரிப்பதன் மூலமும், தேசிய அவசரகால செயல்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதன் மூலமும் தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் அரசாங்கத்தின் அவசரகால தயார்நிலை மற்றும் பதிலளிப்பு திறன்களை வலுப்படுத்தலானது எதிர்ப்பார்க்கப்படுகிறது..

இப் பிரதிபலனால் கருத்திற்கொள்ளப்படுவது பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் அதிர்ச்சிகள் மற்றும் அழுத்தங்களின் போது தாங்கிக் கொள்ளும் திறனை விருத்தி செய்தல், இடர் முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைந்த இடர் அபாயக் குறைப்பிற்கான உத்திகளை விருத்தி செய்தல் மற்றும் பேரிடர் மேலாண்மை அரசாங்க திறன் மேம்பாட்டை செயற் படுத்துதல் என்பனவாகும்.

இதன் கீழ் 03 முடிவுகள் உள்ளன. காலநிலை மாற்றம் துரித வானிலை மற்றும் பிற இடர்கள் நிகழ்வதற்கான நிலைமையை ஏற்படுத்தாது, அதிர்ச்சிகள் மற்றும் அழுத்தங்களால் ஏற்படும் பாதிக்கப்புக்களை குறைத்தல், அதிர்ச்சிகள் மற்றும் அழுத்தங்களால் பாதிப்புக்குள்ளாகும் சமூகங்களிற்கு அவசர முகாமைத்துவத்திற்காக தேசிய நிறுவனங்களின் கொள்ளளவை வலுப்படுத்தல் மற்றும் அடிப்படை உணவுத் தேவைகளை பூர்த்தி செய்தல், அதிச்சிகளின் போது மிகவும் தாங்கிக் கொள்ளும் திறனை ஏற்படுத்தல், அதிர்ச்சி மற்றும் அழுத்தத்தால் அடிக்கடி பாதிக்கப்படும் சமூகங்களிற்கு பலப்படுத்தப்பட்ட அதிர்ச்சி-பதிலளிக்கக்கூடிய வலையமைப்புக்களிலிருந்து பயனடைந்து அவர்களின் தாங்கிக் கொள்ளும் திறனை விருத்தி செய்தல்.

பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் மற்றும் வாழ்வாதாரங்களை பல்வகைப்படுத்துவதன் மூலம் இயற்கையான அனர்த்தங்களை எதிராக தாங்கிக் கொள்ளும் திறனை கட்டியெழுப்புதல் தொடர்பான கருத்திட்டத்தினூடாக, நீர் சேகரிப்பு மற்றும் சேமிப்பு தொடர்பாக வீட்டுரிமையாளர்களை வலுப்படுத்தல், சிறு நீர்ப்பாசன தொகுதிகளின் மறுசீரமைப்பு, விவசாயத்தில் இளைஞர்களின் திறனை விருத்தி செய்தல் போன்றன நிறைவேற்றப்பட்டன. இதன் பிரகாரம் மட்டக்களப்பு, மன்னார், மாத்தளை, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய 5 மாவட்டங்களில் காலநிலை மாற்றத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் மேற்படி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

### i. சிறு நீர்ப்பாசன தொகுதிகளின் மறுசீரமைப்பு

கமநல அபிவிருத்தித் திணைக்களம் சிறு நீர்ப்பாசனத் தொகுதி மறுசீரமைப்புக் கருத்திட்டத்தை செயற்படுத்துகிறது. 2019 இலிருந்து 2022 வரை 76 சிறு நீர்ப்பாசனத் தொகுதிகளை மறுசீரமைக்க திட்டமிடப்பட்டது. இவற்றில், 64 சிறு நீர்ப்பாசனத் தொகுதிகளின் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், எஞ்சிய 12 நீர்ப்பாசனத் தொகுதிகள் 2022 இல் மறுசீரமைக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டன. உலக உணவு வேலைத்திட்டம் உழைப்பு மற்றும் நிர்மாணத்துறையில் முதலீடு செய்தது. ஒரு விவசாயிக்கு ஒரு மாதத்தில் 20 நாட்களுக்காக நாளாந்தம் ரூ. 1400 வழங்கப்பட்டது. மொத்த மனித உழைப்பு நாட்கள் 10481 ஆக இருப்பதுடன் ரூ.14.67 மில்லியன் 175 விவசாய குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. உலக உணவு வேலைத்திட்டம் 12 சிறு நீர்ப்பாசனத் தொகுதிகளை மறுசீரமைப்பதற்கு ரூ. 19.9 மில்லியன் முதலீடு செய்யப்பட்டது. இதற்கு மேலதிகமாக இலங்கை அரசாங்கமும் 2022 ஆம் ஆண்டில் ரூ. 31.6 மில்லியன் முதலீடுகளை மேற்கொண்டது. மேலும் உலக உணவு வேலைத்திட்டத்தின் ரூ. 2.9 மில்லியன் நிதி ஏற்பாடுகள் சிறு நீர்ப்பாசன மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் முகாமைத்துவ பயிற்சி மற்றும் நிர்மாண பயிற்சி நிகழ்ச்சிகளை நிகழ்த்துவதற்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, உலக உணவு வேலைத் திட்டம் நேரடியாக நீர்ப்பாசன தொகுதிகளுக்காக 20 தானியங்கி மழை மானிகளை நிறுவியுள்ளதுடன் அதன் மொத்தப் பெறுமதி ரூ. 20.8 மில்லியன் ஆகும். மேலும் விநியோகிக்கப்பட்டுள்ள நீர்ப்பாசன உபகரணங்களின் பெறுமதி ரூ. 27.3 மில்லியன் ஆகும்.

### ii. விவசாயக் கிணறுகளை மறுசீரமைக்க உதவுதல்

வறட்சிக் காலத்தில் விவசாய நடவடிக்கைகளுக்காக நீர்ச் சேகரிப்பிற்கு ஏற்ற விதத்தில் 605 விவசாயக் குடும்பங்களுக்கு 605 விவசாயக் கிணறுகளை நிறுவுவதற்கு அல்லது புனரமைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டது.

அதற்கு மேலதிகமாக, பயனாளிகளுக்குத் தேவையான பயிற்சி, விதைகள், நட்டுப் பொருட்கள் மற்றும் சந்தை இணைப்புகள் வழங்கப்பட்டன. 2022 ஆம் ஆண்டு விவசாயக் கிணறுகளை புனரமைக்கும் இலக்காக 94 விவசாயக் கிணறுகள் காணப்பட்டதுடன் இதில் 93 விவசாயக் கிணறுகள் பூர்த்தி செய்யப்பட்டன. ஒரு வீட்டிற்கு உதவித் தொகையாக ரூ. 275,000 காணப்பட்டதுடன் 2022 இல் மொத்த முதலீட்டுத் தொகை ரூ. 26.2 மில்லியன் ஆகும். பெரும்பாலான விவசாயிகள் கருத்திட்ட ஓட்டத்திற்கு மேலதிகமாக விவசாயக் கிணறுகளின் அளவை அதிகரிக்கவும், ஆழ்துளை கிணறுகளின் அளவை அதிகரிக்கவும், ஆழ்துளை கிணறுகளின் ஆயுளை மேம்படுத்தவும் முதலீடுகள் மேற்கொண்டுள்ளதை அவதானிக்க லாம்.

**iii. பண்ணைக் குட்டைகள் அமைத்தல்**

மாத்தளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் மழை நீர் மற்றும் கழிவு நீரைச் சேகரிக்கும் வகையில் 30 குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இக் குட்டைகளின் நீர் வறண்ட காலங்களில் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. மேலும், சில விவசாயிகள் குட்டைகளில் நன்னீர் மீன்களை வளர்த்து வந்தனர். 2022ல் மொத்த முதலீடு ரூ. 4.63 மில்லியன் ஆகும்.

**iv. விவசாயிகளுக்காக பயிற்சி வேலைத்திட்டங்கள்**

விவசாய கிணறுகள் மற்றும் நீர் குட்டைகள் அமைப்பதற்காக, உதவிகள் பெறப்பட்ட பயனாளி விவசாயிகளுக்கு திறனான நீர் சேகரிப்பு மற்றும் பயன்பாடு குறித்து 124 பயிற்சி நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டதுடன் ஏற்பட்ட செலவினமாக ரூ. 3.49 மில்லியன் பதிவாகியுள்ளது.

**v. நுண் நீர் விநியோக தொகுதிகளை வழங்குதல்**

5 மாவட்டங்களில் விவசாயக் கிணறுகள் மற்றும் மழை நீர் குட்டைகளை நிர்மாணிப்பதற்காக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் உதவி பெற்ற விவசாயிகளுக்கு 321 நுண் நீர் விநியோக தொகுதிகளை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பதிவிடப்பட்ட செலவு ரூ. 88.99 மில்லியன் ஆகும்.

**vi. இளைஞர் குழுக்களுக்காக தொழில் பயிற்சி வேலைத் திட்டங்கள்**

இக் கருத்திட்டத்தின் நோக்கமாக அமைவது இளைஞர், யுவதிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்காக அவர்களின் திறன்களை விருத்தி செய்வதற்கு பயிற்சி வழங்குவதாகும். பயிற்சி பெற்றவர்களுக்கு மோட்டார் வாகனம், விவசாயத்துறை சார்ந்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் திருத்தம் தொடர்பான துறைகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன . பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த 43 பேருக்குரிய பயிற்சி 2021 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு 2022ஆம் ஆண்டிலும் பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சிக் காலத்திற்கு மாதாந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. பயிற்சியின் முடிவில் தேவையான கருவிகள் வழங்கப்பட்டன. 2022ல் மொத்த முதலீடு ரூ .1.09 மில்லியன் ஆகும்.

**vii. வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகள்**

சிறு போக விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கு இக் கருத்திட்டம் உதவியாக அமையும். ஆடு, கோழி மற்றும் கால்நடை பண்ணைகளை நிறுவுதல், ஏரிகளில் நன்னீர் மீன் குஞ்சுகளை சேமித்து வைப்பது மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகள் குறித்த பயிற்சி மற்றும் விழிப்புணர்வு ஆகியன அடங்கும்.

**அ . ஆட்டுப் பண்ணைகளைச் செயற்படுத்தல்**

85 ஆட்டுப் பண்ணைகள் அமைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டதுடன் 74 ஆட்டுப் பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன. ஆடு முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஆடுகளிற்கான வீடுகளை அமைப்பதற்காக ஒவ்வொரு விவசாயிக்கும் ரூபா 215,000 ஒதுக்கீடு வழங்கப்பட்டது. மொத்த முதலீடு ரூபா 15.91 மில்லியன் ஆகும்.

**ஆ. கோழிப்பண்ணைகளைச் செயற்படுத்தல்**

215 கோழிப்பண்ணைகளை நிறுவுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டதுடன் 215 அலகுகள் நிறுவப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 04 மாத காலத்திற்கு குஞ்சுகள் மற்றும் கோழித் தீனி வழங்கப்பட்டன. கருத்திட்டத்தினூடாக நேரடியாக கோழிக் கூண்டுகள் வழங்கப்பட்டதுடன், ஒரு விவசாயிக்கு குஞ்சுகள் மற்றும் கால்நடைத் தீனிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ரூ. 30,300 கருத்திட்டத்தில் இருந்து வழங்கப்பட்டது. **மொத்த முதலீடு ரூ. 6.28 மில்லியன் ஆகும்.**

**இ. கால்நடை பண்ணைகளைச் செயற்படுத்தல்**

57 கால்நடைத் தொழுவங்கள் நிர்மாணிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டதுடன், இதில் 44 கால்நடை தொழுவங்களே நிறுவப்பட்டன. கால்நடைத் தொழுவமொன்றை நிர்மாணிப்பதற்காக ஒரு பயனாளிக்கு ரூபா 335,000 வழங்கப்பட்டது. மொத்த முதலீடு ரூ. 18.34 மில்லியன் ஆகும். மேலும் கால்நடைகளுக்கு புல் வளர்ப்பதற்காக ஒரு பயனாளி விவசாயிக்கு தலா 5,000 ரூபாய் வழங்கப்பட்டது. 57 மேய்ச்சல் நிலங்கள் நிறுவப்பட்டதுடன் மொத்த முதலீடு ரூ. 0.29 மில்லியன் ஆகும்.

**ஈ. மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறு மீன் (finger lings) வளர்ப்பு நிலையத்தை நிறுவுதல்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் 05 சிறு மீன் வளர்ப்பு நிலையங்கள் நிறுவப்பட்டன. மொத்த முதலீடு ரூ. 2.04 மில்லியன் ஆகும்.

**உ. கலாச்சாரம் சார்ந்த உள்நாட்டு மீன்வளம்**

மாத்தளை மாவட்டம் வில்கமுவ பிரதேச செயலகத்தில் உள்ள நீர்த்தேக்கத்தில் 50,000 சிறிய மீன் குஞ்சுகள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. செலவு ரூ. 210,000 ஆகும்.

**ஊ. விவசாய செயலாக்கம் மற்றும் பெறுமதி சேர் வணிகங்கள்**

03 மாவட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட 21 குடும்பங்கள் பெறுமதி சேர் தொழில்களை உருவாக்குவதற்கு ஆதரவளிக்கப்பட்டுள்ளன. மொத்த முதலீடு ரூ. 5.78 மில்லியன் ஆகும்.

**எ. வாழ்வாதார செயற்பாடுகளிற்காக பயிற்சி, ஆய்வு, விழிப்புணர்வுகளிற்கான சுற்றுலா**

பயிர்ச் செய்கை முறைகள், பெறுமதி சேர்த்தல், சந்தைப்படுத்தல் உள்ளிட்ட வாழ்வாதார நடவடிக்கைகளுக்காக 285 பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் 03 ஆய்வுச் சுற்றுலா நிகழ்ச்சிகளும் நிகழ்த்தப்பட்டன. மொத்த முதலீடு ரூ.3.49 மில்லியன் ஆகும்.

### viii. தெற்கு-தெற்கு ஒத்துழைப்பு திட்டம்

இக் கருத்திட்டத்தின் நோக்கமாக அமைவது காலநிலைக்கு ஏற்ற விவசாய முறைகள்,விருத்தி செய்யப்பட்ட அறுவடை மற்றும் அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ நடைமுறைகளை கடைப்பிடிப்பதினூடாக உற்பத்தித் திறனை வலுப்படுத்தி சந்தை அணுகலுக்காக விவசாயிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் திறனை வலுப்படுத்தலாகும்.

விவசாயிகளுக்கு 100 பயிற்சி வேலைத் திட்டங்கள் நிகழ்ந்துள்ளதுடன், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் உள்ளூர் வியாபாரிகளுக்கு அறுவடை மற்றும் அறுவடைக்குப் பின்

தொழில்நுட்பம் தொடர்பான இயந்திரங்கள் குறித்து 15 பயிற்சி நிகழ்ச்சிகளும் நிகழ்த்தப்பட்டன.

மொனராகலை மாவட்டத்தின் சியம்பலாண்டுவ பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கால்வாய்கள் புனரமைக்கப்பட்டன. 500 ஏக்கர் சோளப் பயிர்ச் செய்கைக்காக சோள விதைகள், அடிப்படை உரங்கள், கிருமி நாசினிகள், மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக 575 விவசாயக் குடும்பங்களுக்கு தேவையான நிதியுதவி வழங்கப்பட்டது.

உலக உணவு வேலைத் திட்டம் நேரடியாக அனுராதபுரம் மற்றும் மொனராகலை மாவட்டங்களில் அமைந்துள்ள விவசாய அமைப்புகளுக்கு 02 நடவு இயந்திரங்கள் மற்றும் 02 களை கட்டுப்பாட்டு இயந்திரங்களை வழங்கியுள்ளது. 2022 ஆம் ஆண்டில் இக் கருத்திட்டத்திற்குரிய மொத்தச் செலவு ரூ. 25.89 மில்லியன் ஆகும்.

**4. 2025 ஆம் ஆண்டளவில் இலங்கையில் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்கள், பருவ வயதை அடைந்த சிறுமிகள், மற்றும் குழந்தைப் பேறு வயதுடைய பெண்களின் போசாக்கை விருத்தி செய்தல்.**

குறை வளர்ச்சி, ஊட்டச் சத்து குறைபாடுகள் மற்றும் அதிக அளவான போசணை அதிகரிப்புப் போக்குகளுக்கு பதிலளிக்கும் வகையில், நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் உள்ள குறிப்பிட்டு நிர்ணயிக்கப்பட்ட குழுக்களுக்கும், ஒட்டுமொத்த மக்களுக்கும் தொழில்நுட்ப உதவி மற்றும் சான்று அடிப்படையிலான ஆலோசனைகள் மூலம் ஊட்டச்சத்து விளைவுகளை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இது 2025 உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. உலக உணவு வேலைத் திட்டத்தின் மூலம் தொழில்நுட்ப உதவி வழங்குதல், கொள்கை வலுப்படுத்துதல், பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்தல், இலக்குகளை கண்காணித்தல் மற்றும் உலக நாடுகள் மற்றும் பிராந்தியங்களுக்கு இடையே அறிவு பரிமாற்றத்தை எளிதாக்குவதற்காக ஐ.நா முகவர் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட அரச நிறுவனங்கள் அற்ற ஏனைய பங்குதாரர்களுடனும் செயற்படுகிறது.

இந்த முடிவு ஊட்டச்சத்து குறைபாட்டின் உடனடி மற்றும் அடிப்படை காரணங்களை நிவர்த்தி செய்கிறது. பின்வரும் 02 வெளியீடுகள் மூலம் இந்த முடிவு அடையப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. போசனை மட்டத்தை விருத்தி செய்வதற்காக போசனை வேலைத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான அரசாங்கத் திறனை வலுப்படுத்துவதன் மூலம், 05 வயதுக்குட்பட்ட குழந்தைகள், பருவ வயதை அடைந்த சிறுமிகள் மற்றும் குழந்தைப் பேறு உள்ள பெண்கள் என்போரை பயனாளிகளாக நியமித்து, 05 வயதுக்குட்பட்ட குழந்தைகள், பருவ வயதை அடைந்த சிறுமிகள் மற்றும் குழந்தைப் பேறு உள்ள பெண்கள் என்போரின் போசனையை விருத்தி செய்வதற்காக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சத்துள்ள விசேடமாக தயாரிக்கப்பட்ட உணவுகளை விருத்தி செய்வதன் மூலம் பெறப்படும் பயனை அடைதல்.

**I. த்ரீபோஷா உற்பத்திக்காக சோளம் மற்றும் சோயா கொள்வனவு**

உலக உணவு வேலைத் திட்டம் நேரடியாக த்ரிபோஷா தயாரிப்புகளுக்காக சோளம் மற்றும் சோயாவை கொள்வனவு செய்தது. இதன் பிரகாரம், 140.95 மெற்றிக் தொன் சோளமும், 39.5 மெற்றிக் தொன் சோயாவும் உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்டு, அவை சுகாதார அமைச்சின் கீழ் உள்ள இலங்கை த்ரிபோஷா நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. தொகுதிகளின் மொத்தப் பெறுமதி ரூ. 51.623 மில்லியன் ஆகும்.

**II. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்குதல்**

களுத்துறை மாவட்டத்தில் உள்ள 05 வயதுக்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு உலக உணவு வேலைத் திட்டம் நிதியுதவி வழங்கியுள்ளது. மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை 637 ஆகக் காணப்படுவதுடன் ஒரு குடும்பத்திற்கு ரூ.10,000.00 வழங்கப்பட்டது. இந்த தொகை ஒரே தடவையில் வழங்கப்பட்டதுடன், இதன் மூலம் அவர்களின் போசனை மட்டத்தை உயர்த்த தேவையான உணவை கொள்வனவு செய்யும் திறன் அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் இக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இக் கருத்திட்டத்தில் முதலீடு செய்யப்பட்ட தொகை ரூ. 6.37 மில்லியன் ஆகும்.

**நிதி முன்னேற்றச் சுருக்கம்**

| **இல.** | **பெறுபேறு** | **செலவு (ரூ.மில்லியன்)** | **மொத்த செலவினத்தின் %** |
|---|---|---|---|
